
குங்குமச் சிமிழ்


1-10-2006

விலை ரூ.4



# கோடையில் ஒரு மழைச்சாரல்

ராஜசியாமளா பிரகாஷ்




சூர்யா - ஜோதிகா
திருமணக்காட்சி

முழு நாவல்

# கோடையில் ஒரு மழைச்சாரல்

மதுமிதா வகுப்பை விட்டு வெளியே வந்தாள். கையில் ஸ்டெத்தும் தோளில் வெள்ளைக் கோட்டும் தளரப் பின்னிய கூந்தலும் அசைய, கம்பீரமாய் இருந்தது அவள் நடை. கிரேக்கக் கூர் மூக்கும் கருந்திராட்சை விழிகளும் சின்னச் சிவப்பு மிளகாய் இதழ்களும் அவள் பேரழகி என்றன. காரிடரில் அங்கங்கு குழுமியிருந்த மாணவ மாணவியரை லாகவமாய்க் கடந்து வேகமாய் நடந்தாள்.

"மது, லஞ்ச் சாப்பிட வரலையா?" அவள் பின்னால் நாய்க் குட்டி போல் ஓடிவந்த அவள் வகுப்புத் தோழி திவ்யா மூச்சு வாங்கக் கேட்டாள்.

"வரேன்பா, பிருந்தா மே'ம் ஏதோ கூப்பிட்டாங்களாம். என்னனு கேட்டுட்டு வந்துடறேன், சரியா?"

"சரிதான். இப்போதைக்கு நீ வந்த மாதிரிதான்."

திவ்யா விலக, சிரித்துக் கொண்ட மதுமிதா ஆசிரியர்களுக்கான அறை நோக்கிப் போனாள்.

"கூப்பிட்டீங்களா மே'ம்?"

பிருந்தாவின் முகம் இவளைப் பார்த்தவுடன் மலர்ந்தது.

"வா மது," என்றவர் சின்ன பாட்டில் மூடியைத் திறந்து அவளிடம் நீட்டினார், "வெள்ளிக்கிழமைனு பாயசம் செஞ்சேன். உனக்குப் பிடிக்குமே, சாப்பிடு."

மதுமிதா சற்று நெளிந்தாள். மற்ற லெக்சரர்கள் சிரித்தபடி கடக்க, சங்கோஜப்பட்டாள்.

தயங்கியபடி, "பிராக்டிகல்ஸ் இருந்தது..." என்றாள்.

-ராஜசியாமளா பிரகாஷ்

"டிஸ்ஸெக்ஷன் பண்ணினியா?"

"சாப்பிடவே தோணலை, மே'ம்."

"இதெல்லாம் பார்த்தா எப்படி டாக்டராக முடியும். ஒரு நாளைக்கு வயிறைப் பிளந்து அஞ்சாறு அப்டமன் சர்ஜரியை அனாயாசமா செஞ்சுட்டு விருந்தை ஒரு பிடி பிடிக்கற டாக்டர்கள் உண்டு. இதெல்லாம் ஆரம்ப காலத் தயக்கங்கள். போகப் போகச் சரியாப் போயிடும். ஒரு டாக்டரோட பொண்ணுக்குச் சொல்லணுமா? முந்திரியும் திராட்சையும் மிதக்கற பாயசத்தைப் பாரு. உனக்காகவே நிறையப் போட்டேன்."

மதுவிற்குச் சற்று சிரமமாகவே இருந்தது. அறுத்த உடலில் பூரணமாய் ஜீரணமாகாமல் இருந்த மிச்சங்கள் தான் நினைவில் மோதியது. இருந்தாலும் பிருந்தாவைப் புண்படுத்த விரும்பவில்லை. மெல்ல கவனத்தை திசை திருப்பி பாயசத்தைச் சுவைத்தாள். நிஜமாகவே அபாரமாய் இருந்தது.

"எப்படி?"

"சூப்பர். உங்க பாயசத்துக்குக் கேட்கணுமா?"

"லஞ்ச் என்ன கொண்டு வந்திருக்க?"

"தெரியலை. போய்ப் பார்த்தாத்தான் தெரியும். ரமேஷ் பாயசம் குடிச்சானா?"

"காலையில குடிச்சான். மதியம் உன்னை மாதிரி கூப்பிட்டுக் கொடுத்தா சாப்பிடுவானா என்ன? என்ன இருந்தாலும் பொண்ணுங்களுக்கு இருக்கற அண்டர்ஸ்டாண்டிங் பசங்களுக்குக் கிடையாது."

"இவ்வளவு ஆசை வச்சிருக்கிங்களே மே'ம். ஒரு பெண் குழந்தையும் பெத்திருக்கலாமில்ல." ஏதோ உரிமையில் சட்டென்று கேட்டுவிட்டாள். மதுமிதா.

ஒரு நொடி பிருந்தாவின் முகம் வாடிவிட்டது. சட்டென்று சமாளித்துக் கொண்டு. "எனக்கு நீதான் இருக்கியே-மகளா. போதாதா?" என்றாள் சிரித்து. தொடர்ந்து. "டயமாயிடப் போகுது. போய் சாப்பிடு. சாப்பிடுவியா மாட்டியா? இல்ல, இங்க கொண்டு வந்து என் முன்னாடி சாப்பிடு."

"ஐயோ, சாப்பிட்டுடுவேன். பிரெண்ட்ஸ் காத்திருங்காங்க"

"சரி, எதுக்குக் கூப்பிட்டேன்னா, இன்னைக்கு ஈவ்னிங் வீட்டுக்கு வரமுடியுமானு கேட்கத்தான்."

யோசிக்கவே இல்லை மதுமிதா, "ஓ! வரேனே!" என்றாள்.

"சரி, டின்னர் சாப்பிடறா மாதிரி வந்துடு."

"ம்" பலமாகத் தலையாட்டி விட்டு வெளியே வந்தாள் மதுமிதா. ...சையில் சுலபமாய்ச் சொல்லிவிட்டாள். ஆனால்...

அம்மாவை சமாளித்து பிருந்தா மே'ம் வீட்டிற்கு எப்படிப் போகப் போகிறோம் என்ற கவலை எழுந்தது. 'பிருந்தா' என்ற பெயரே அம்மாவை





நிறம் மாற்றிவிடுகிறதே!

வெங்காயமும் இஞ்சி, பூண்டும் நெய்யில் வதங்கும் மணம் கும்மென்று எழுந்தது. தண்ணீரில் அலசிய பாசுமதி அரிசியை ஒட்டப் பிழிந்து நெய் கலவையில் சேர்த்தாள் அகிலா. தோல் போட்டிருந்த கேரட்டும், பீன்சும், பட்டாணியும், உருளையும் வெள்ளை அரிசியில் வண்ணமயமாய்க் கலந்திருந்தன. எல்லாவற்றையும் நன்கு கிளறி குக்கரை மூடி விசிலைப் போட்டாள்.

மணி பார்த்தாள் அகிலா. ஏழரை. இரண்டு விசிலில் ஃப்ரைட் ரைசை இறக்கினால், மதுவை சாப்பிட அழைத்து விடலாம். பாவம் குழந்தை. இன்று பிராக்டிகல் வகுப்பு நடந்திருக்கும். உடலைக் கிழி அறுக்கும் நாட்களில் சாப்பிட அவதிப்படுவாள். மதியம் சரியாகச் சாப்பிட்டிருக்க மாட்டாள். அதனால்தான் அவளுக்குப் பிடித்த ப்ரைட் ரைஸ் செய்தாள். நன்றாக சாப்பிடட்டும் எண்ணியபடி பிரிட்ஜிலிருந்து சில்லென்ற தயிரை எடுத்து உப்பு போட்டு, லேசாகக் கடைந்தாள். பொடிப் பொடியாய் வெங்காயத்தை நறுக்கி அதில் போட்டு மல்லித் தழையைத் தூவினாள். பப்படம் பொரித்து டப்பாவில் போட்டுவிட்டு, அவளை விசிலடித்து அழைத்த குக்கரை டப்பென்று காசை அணைத்து அடக்கினாள்.

மெல்ல மகளின் அறையை எட்டிப் பார்த்தாள். மதுமிதா யாரோ சித்திரமாய் ஓவியம் வரைந்து வண்ணம் பூசியது போல் வெள்ளைச் சுரிதாரில் சிவப்புப் பூக்கள் சிதறிய சுரிதாரில் ஒரு பெரிய பூவாய் அமர்ந்து கொண்டிருந்தாள். அவள் முன்னே பாடப்புத்தகம் விரிந்து கிடந்தாலும், சிந்தனை அங்கில்லை என்பதை அவளின் நிலைத்த பார்வை காட்டிக் கொடுத்தது. வழக்கமாய் வீட்டில் நைட்டியில் இருப்பாள்.

"என்ன மது, எங்கேயாவது வெளிய போறியா?"

திடுக்கிட்டுத் திரும்பினாள் மதுமிதா.

"எ... என்னம்மா? ஆ... ஆமாம்..." என்றவள் தயங்கி, "பிருந்தா மே'ம் கிட்டப்போயி இந்தப் பாடத்துல சந்தேகம் கேட்டு வரலாம்னு நினைக்கறேன்."

அகிலாவின் முகம் உடனே சுருங்கியது. மதுமிதா அதைக் கவனித்தாள். மெல்ல, "ப்ளீஸ்ம்மா.... பாட விஷயம்..."

"ஏன், உன் அப்பாவும் டாக்டர்தானே. அவர் வந்தவுடன் கேளேன்."

"ஆமாம்... அவர் டியூட்டி முடிஞ்சு எப்ப வந்து எப்ப எனக்கு டவுட் கிளியர் பண்ணுவதாம்?"

"சரி, ப்ரைட்ரைஸ் பண்ணி வச்சிருக்கேன். சாப்பிட்டுப் போ."

மதுமிதாவிற்குத் தூக்கி வாரிப்போட்டது.

அங்கே டின்னருக்கே வரச்சொல்லி இருக்கிறார் பிருந்தா மே'ம் என்றால் அவ்வளவுதான். இங்கே கொஞ்சம் சாப்பிட்டு அங்கே கொஞ்சம் சாப் பிடுவதா? அதுதான் நல்லது.

"சரி, தட்டை எடுத்து வைம்மா."

அகிலா சமையலறைக்குத் திரும்பும் முன், தொலைபேசி அழைத்தது.



"ஹலோ, அகிலாவா? நான் பிருந்தா. நல்லா இருக்கியா?" பற்களைக் கடித்துக் கொண்டாள் அகிலா, "ம், இருக்கேன்! என்ன விஷயம்?"

"குழந்தைய டின்னருக்குக் கூப்பிட்டிருந்தேன். வரேன்னு சொன்னா. இன்னும் குமார் ஹாஸ்பிடல்லயிருந்து வந்திருக்க மாட்டாரே. அதான் காரோட ரமேஷை அனுப்பறேன். மதுவை அனுப்பி வைக்கறியா?"

அவ்வளவுதான் புசுக்கென்று அகிலாவிற்குக் கோபம் தலைக்கேறியது. என் மகளை அழைத்து இவள் என்ன டின்னர் தருவது? என்ன உரிமை? என்ன அதிகாரம்? எல்லாம் குமார் கொடுக்கும் இடம். இந்த மதுவும் இணைந்து ஆடுகிறாள்!

"ஹலோ, அகிலா."

"ம், சரி, ரமேஷை அனுப்பு." டொக்கென்று ரிசீவரை வைத்துவிட்டாள்.

"நீயும் வரியா?" என்ற பிருந்தாவின் அழைப்பு அவள் காதிலேயே விழவில்லை. பார்த்துப் பார்த்து மகளுக்கு இவள் செய்ய, எவளோ டின்னருக்கு அழைப்பு விடுத்து மகளை இழுத்துக் கொள்கிறாள். என்ன நியாயம் இது?

மதுவும்தான் என்னமாய் பொய் சொல்கிறாள். படபடவென்று வந்தது அகிலாவிற்கு. விடுவிடென்று சமையலறைக்குள் போனாள். அகிலாவின் நிலையோ, பிருந்தா தொலைபேசியதோ அறியாமல், "சாப்பாடு ரெடியாம்மா?" என்று வந்து டைனிங் டேபிளில் அமர்ந்து கொண்டாள் மதுமிதா.

அவளைப் பார்த்து முறைத்த அகிலா வேகமாய் ப்ரைட் ரைஸ் பாத்திரத்தை எடுத்து வந்தாள். மதுமிதா பார்த்துக் கொண்டிருக்க இருக்க, அப்படியே சுடச்சுட குப்பையில் கொட்டினாள். மதுமிதா ஸ்தம்பித்தாள்.

## 2

ரமேஷ் சீராக காரை ஓட்டிக் கொண்டிருந்தான். பக்கத்தில் மதுமிதா மௌனமாய் உட்கார்ந்து கொண்டு வருவது அவனுக்கு விசித்திரமாகப்பட்டது.

"என்னாச்சு?" என்றான்.

அவள் புருவம் சுருக்கி தலையாட்டி, "எ... என்ன?" என்றாள்.

"இப்படி மௌனச் சாமியாரா வரியே அதான் கேட்டேன். வீட்லயும் நீ சரியாவே இல்லை" என்றான்.

அவள் மய்யமாய்ச் சிரித்தாள். அவனிடம் ஒப்புக்கொள்ள மனமில்லாமல், "ஒண்ணுமில்லையே" என்றாளே தவிர அம்மாவின் செயல் அவளை அதிகமே பாதித்திருந்தது. அவளால் அதை மற்றவர்களிடம் வெளிப்படையாய் ஒப்புக்கொள்ளவும் முடியவில்லை. மனதுள் புதைத்து விட்டு வெளியே பகட்டாக சிரிக்குமளவு அனுபவமும் இல்லை.



## உடலே நலமா?

**முத்தாரம் எம்.ஜி.தாஸ்**

'முற்றம்' வெளியீடு

17/9, சுவாமி ஆச்சாரித் தெரு, இராயப்பேட்டை, சென்னை-14.

144 பக்கம், விலை ரூ.45

**வா**ழ்விற்குப் பயனளிக்கும் ஏராள விஷயங்களை நமக்கு எடுத்துரைக்கும் அருமையான கட்டுரைகளின் தொகுதி நூல் இது. நினை வாற்றலை வளர்ப்பது எப்படி? ஜலதோஷத்தைத் தவிர்க்கும் முறை கள், தலைவலிக்குத் தீர்வு உண்டா? மாரடைப்பைத் தடுக்க முடியுமா? என்பது போன்ற உபயோகமான 23 தலைப்புகளில், விரிவாக மருத்துவ ரீதியான தகவல்களை அரிதின் முயன்று, நமக்கு எளிய நடையில் விரித்துரைக்கிறார் எம்.ஜி. தாஸ். குடும்பக் கையேடு போல ஒவ் வொருவரும் வாங்கி வைத்துப் பயன்பெறலாம்.

---

அதனால்தான் அவர்கள் வீட்டில் கூட அவளால் இயல்பாய் இருக்க முடியவில்லை. பிருந்தா பார்த்துப் பார்த்துதான் சமைத்திருந்தாள்.

பொதுவாகவே அது கலகலப்பான குடும்பம். டாக்டர் ராஜசேகர் இவள் அப்பா குமாருடன் சேர்ந்து நகரின் முக்கியப் பகுதியில் இருதய சிறப்பு மருத்துவமனை நடத்தி வருகிறார் பிருந்தா மருத்துவக்கல்லூரி விரிவுரையாளர். ஒரே மகன் ரமேஷ், மருத்துவக்கல்லூரியில் கடைசி வருடம் முடித்துவிட்டு ஹவுஸ் சர்ஜன் செய்கிறான். எப்போதும் மகிழ்ச்சியும் பேச்சும் சிரிப்புமாய் வீடு நிறைவாய் இருக்கும்.

மதுவைப் பொறுத்தவரை ராஜசேக்ரும் பிருந்தாவும் அன்யோன்யமான தம்பதி. மருத்துவம், இசை, நல்ல புத்தகங்கள் என்று விவாதிக்கும் அறிவு ஜீவிக் குடும்பம். எல்லாவற்றையும் விட மருத்துவர்களுக்குத் தேவையான அன்பும் கருணையும் நிறைந்த மனங்கள். எல்லோரிடமும் அன்பும் நட்பும் பாராட்டும். இந்த சூழல் சிறுவயது முதலே மதுமிதாவிற்கு ரொம்பப் பிடிக்கும். இவள் குடும்பத்திலும் டாக்டர் அப்பா, வீட்டை நிர்வகிக்கும் படித்த அம்மா, அவர்களின் ஒரே மகள் தான் இவள். ஆனால், எங்கோ ஓர் இழையில் எதுவோ குறைவதாய்ப்படும். அப்பா குமார் நல்ல கலகலப்புத் தான். அம்மாவுக்கும் நல்ல கல்வி அறிவு உண்டு. ஆனால், வீட்டில் மகிழ்ச்சி, பேச்சுவார்த்தை எல்லாமே குறைவுதான். ஏன்?





## நான் கண்ட எழுத்தாளர்கள்

**ஏ.என்.எஸ்.மணியன்**

நிவேதிதா புத்தகப் பூங்கா

14, இரண்டாவது தளம்

-பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,

சென்னை-14.

128 பக்கம், விலை ரூ.50

**'ஜெ**மினி கேண்டீன்' என்னும் அருமையான நூலை எழுதி, திரையு லக நினைவுகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொண்ட பெரியவர் ஏ. என்.எஸ்.மணியன், அண்மையில் தாம் எழுதிய ஒரேயொரு முதல் சிறு கதைக்கே 'பொற்றாமரை' இலக்கிய அமைப்பின் தங்கப்பதக்கப் பரிசினைப் பெற்றவர். ஜெமினி ஸ்டூடியோ, எக்ஸ்பிரஸ் எஸ்டேட் போன்ற இடங்களில் ஊழியர்களுக்கான உணவு விடுதி நடத்திய இப்பெரியவர் பழம் பெரும் படஅதிபர் வாசன் முதல், எழுத் தாளர்கள் சாவி, மணியன், ஏ.என். சிவராமன், ஜெயகாந்தன், நாபா, சி.சு.செல்லப்பா, வல்லிக்கண்ணன், புதுமைப்பித்தன் என அரை நூற் றாண்டுக் காலத்திற்கும் மேலாக ஏராளமான இலக்கியப் பிரபலங் களுடன் பழகியவர். சிறந்த இலக்கிய ஆர்வலரான இவர், தாம் பார்த்தும் படித்தும் பழகிய எழுத்தாளர்களை யும் அவர்களின் படைப்புகளையும் பற்றி இந்நூலில் விவரித்துள்ளார். இது ஒரு நல்ல முயற்சி. படிப் போர் பல படைப்புகளைப் பற்றி யும், எழுத்தாளர்கள் பற்றியும் அறிய உதவும் அரிய காலப் பதிவாக இந் நூல் அமைந்துள்ளது.

-கௌதமநீலாம்பரன்

---

அம்மாவும் அப்பாவும் கட மைக்காக வாழ்வது போன்ற இயந்திரத்தனத்தில் உழல, இடையே இவள் தான் அல்லாடியிருக்கிறாள். இதனாலேயே கிடைக்கும் சந்தர்ப்பத்தில் பிருந்தா வீட்டிற்குப் போகமுடிந்தால், சந்தோஷமாய் கிளம்பிவிடுவாள் மதுமிதா. பேச்சும், சிரிப்பும், கேலியும், கிண்டலும், படிப்பு சம்பந்தமான விவாதங்களுமாய் பொழுது போவதே தெரியாமல் பறக்கும். ஆனால், அகிலா இதையெல்லாம் ரசித்ததில்லை. அதுவும் கொஞ்ச நாட்களாகவே அகிலா வெளிப்படையாக பிருந்தா மீது அதிருப்தியைக் காட்டு வதாய்ப்பட்டது மதுமிதாவிற்கு. ஏன் என்பது தான் புரியவில்லை. இதுவரை கோபத்தை வார்த்தைகளாலும் முகம் தூக்குவதன் மூலமும் மட்டுமே வெளிப்படுத்தி வந்த அகிலா அப்படியே சாப்பாட்டை குப்பையில் கொட்டியதைப்

பார்த்து இன்று ஆடிப் போனாள் மதுமிதா. என்ன ஆயிற்று இந்த அம்மாவுக்கு?

இந்த எண்ணக் குழப்பத்தில் இருந்தவளால் எப்படி வழக்கம் போல் பேசிச் சிரித்து விருந்தை அருந்தமுடியும்? பிருந்தா வழக்கம்போல் ஆசையாய்த்தான் பரிமாறினாள். ராஜசேகர் சற்று தாமதமாய் வந்தாலும், வழக்கம்போல் கலகலப்பாய்த் தான் பேசினார்.

"ஆடி சேல்ஸ்னு நாலு காட்டன் சேலை எனக்காக எடுத்தேன். அப்ப இந்த சுரிதார் ரொம்பப் பிடிச்சுது. என் பொண்ணு நீதானே. அதான் உனக்கு எடுத்தேன்," என்றபடி அந்த காஸ்ட்லி சுரிதார் செட்டை வெற்றிலைப் பாக்குத் தட்டில் வைத்து பிருந்தா நீட்டியபோதும், இவளால்தான் வழக்கம்போல், "ஹை! ப்யூட்டிஃபுல்" என்று குதிக்க முடியவில்லை.

இதையெல்லாம் கவனித்து விட்டுத்தான் ரமேஷ் கேட்கிறான். என்னவென்று சொல்வாள்?

"இன்னைக்கு பிராக்டிகல்ஸ் இருந்தது. அதனால, சரியா மதியம் சாப்பிடலை. ஒரு மாதிரி தலைவலியா டயர்டா இருக்கு. அதான்" என்று சமாளித்தாள்.

"போச்சுப்போ. நீ சர்ஜனானா தினமும் பட்டினிதான் கிடப்ப போலிருக்கு."

வெறுமையாய் ஒரு சிரிப்பை சிந்திவிட்டு இறங்கிக் கொண்டாள் மதுமிதா.

குமார் மொட்டை மாடியில் உலவிக் கொண்டிருந்தார். மேகங்கள் யாரோ துரத்துவது போல் -நிலாவால் வெள்ளி முலாம் பூசிக்கொண்டு -வேகமாய் ஓடிக் கொண்டிருந்தன. வானம் தன் வைரக் கற்களை நட்சத்திரங்களைக் கொட்டி எண்ணிக் கொண்டிருந்தது.

அன்று இரண்டு இருதய அறுவை சிகிச்சை செய்திருந்தார் குமார். ஒன்று சற்று சிக்கலாய் போய்விட்டது. இதயத்தை திறந்து பார்த்தபோதுதான், சிக்கலின் தீவிரம் பிடிபட்டது. நாலு மணி நேரத்தில் முடிந்திருக்க வேண்டிய அறுவை சிகிச்சை எட்டு மணி நேரம் எடுத்துவிட்டது. எப்படியோ நல்லபடி முடிந்ததில் ஒரு திருப்தி. ஒரு மனித உயிரோடு விளையாடி, இறுதியில் ஜெயிக்கும் வரை என்ன டென்ஷன்!

சோர்ந்த மனதின் அலுப்பைப் போக்க சுகமான தென்றல் தாலாட்ட நடந்து கொண்டிருந்தவர் முன் புயலாய் வந்து நின்றாள் மதுமிதா.

"ஹாய், மது டார்லிங்! வாடா. என்ன ராஜா வீட்ல விருந்து பலமா?"

"அங்க கவனிப்பெல்லாம் நல்லாத்தாம்ப்பா இருந்தது. ஆனா... நம்ம வீட்லதான்..." முகம் திருப்பி படபடத்தாள் மதுமிதா. அவர் நடப்பதை நிறுத்திவிட்டு மகளிடம் வந்து நின்றார்.

"எனி ப்ராப்ளம்?"

"அம்மா ஏம்ப்பா இப்படி இருக்காங்க? பிடிக்கலைனா 'அங்க நீ



போறது பிடிக்கலை. நிறுத்திக்க'னு சொல்லிடலாம். அதை விட்டுட்டு ஏன் இப்படி..." என்று முகத்தை சுருக்கினாள். பின் மாலை நடந்தவற்றை விவரமாய்ச் சொன்னாள்.

நிதானமாய்க் கேட்டுக் கொண்டார் குமார்.

"ஏன் அம்மா இப்படி நடந்துக்கணும்? ரமேஷ் அம்மாவை எனக்குப் பிறந்தது முதல் தெரியும். இப்ப அவங்க எனக்கு காலேஜ்ல லெக்சரர். பிரண்டு குடும்பமும் எப்பவும் பிரெண்ட்லியா பழகறோம். தப்பா? அம்மாதான் எப்பவுமே யார் கூடவும் ஒட்டாம ஒதுங்கி இருப்பாங்க. நானும் அப்படியே இருக்கணுமா? என்ன எதிர்பார்க்கறாங்க?"

படபடவென பொரியும் மகளை சிரிப்புடன் பார்த்தார் குமார்.

"ஈஸி... ஈஸி... கூல் மை கேர்ல். ஏன் இப்படி டென்ஷனாகறே? நாளைக்கு நீயும் ஒரு டாக்டர் சூழலை நிதானமா அனலைஸ் பண்ணு. மே பி யூர் மதர் ஈஸ் பொசஸிவ்." பாக்கெட்டில் கைவிட்டபடி தோள் குலுக்கினார்.

"என்ன அவசியம்? யார்கிட்ட எப்படிப் பழகினாலும் நான் இவங்க மகதானே."

"அதை அவங்ககிட்ட எடுத்துச் சொல்லு."

ஒரு நொடி அவர் வார்த்தைகளை மனதுள் வாங்கி சீர்தூக்கிப் பார்த்தவள் விருட்டென்று அங்கிருந்து வந்த வேகத்தில் திரும்பிப் போனாள், அதே புயல் போல்.

அம்மா அகிலா சமையலறையை ஒழித்துக் கொண்டிருந்தாள். மெல்ல பூனை போல் போய் பின்னாலிருந்து கட்டிக் கொண்டாள் மதுமிதா.

விருட்டென்று அவளை விலக்கிவிட்டாள் அகிலா.

"மம்மி... இன்னும் கோபமாடா?"

"இந்தக் கொஞ்சலெல்லாம் இங்க வேண்டாம்."

"வேற எங்க போறதாம்?"

"அதான் அந்த பிருந்தா இருக்காளே. அங்க போ."

மதுமிதா கலகலவென்று சிரித்துவிட்டாள்.

"சோ, அப்பா சொன்னது சரி. யுவார் ஜெலஸ், ரைட்?"

"போடி வேலையப் பார்த்துக்கிட்டு. அந்த மனுஷர் தான் கெட்டது போதாதுனு உன்னையும் கெடுக்கறாரா?" சீறினாள்.

"அம்மா பிளீஸ் புரிஞ்சுக்க. நான் யார் கூட எவ்வளவு நெருக்கமா பழகினாலும் என் மனசுல முதல் இடம் உனக்குத்தான். என் அம்மா நீ. நான் தான் உன் மகள்... சரி சாப்பிட்டியா?"

மகள் தன்மையாய்ப் பேசியதில் சற்று இளகினாள் அகிலா.

மௌனமாய் டைனிங் டேபிளில் அமர்ந்தாள். தன் பேச்சு அம்மா மனசைத் தொட்டிருப்பதைப் புரிந்து கொண்டாள் மது. அப்பாவும் ராஜசேகரும் வெளியே சாப்பிட்டுவிட்டு வந்ததை பிருந்தா வீட்டிலேயே தெரிந்து கொண்டிருந்தாள். தனக்கென்று எதுவும் செய்து கொண்டிருக்க மாட்டாள் அம்மா. பிரிட்ஜைத் திறந்து பார்த்தாள். பிரெட் ஜாம்

**மெக்ஸிகோவில் ரட்டா மிரா** பால் என்ற 9 வயது சிறுவன் எருதுச் சண்டை போட்டிகளில் கலந்து கொண்டு பார்வையாளர் களைக் கவர்ந்து வருகிறான். இதுவரை இரண்டு டஜன் போட்டிகளில் இவன் பங்கு பெற்றுள்ளான். சண்டையின் கடைசியில் எருதைக் கொல்ல இவனுக்கு அனுமதி இல்லை. 11 அல்லது 12 வயதுகளில் இந்த வாய்ப்பு அவனுக்கு அளிக்கப்படுமாம்.

-க.ரவீந்திரன்

இருந்தது. அழகாய் பதமாய் ஜாமைத் தடவி அம்மாவிற்கு தட்டில் வைத்து நீட்டினாள். தானும் ஒரு ஸ்லைஸ் எடுத்துக் கொண்டு, "உன்னால அங்க நான் சரியாவே சாப்பிடலை தெரியுமா?" என்றாள்.

சட்டென்று அகிலாவின் கண்கள் நிறைந்துவிட்டன. "பால் காய்ச்சிக் கொடுக்கட்டுமா? வேற ஏதாவது செஞ்சு கொடுக்கட்டுமா?" பதறும் தாயை அன்பாய்ப் பார்த்தாள் மதுமிதா. இத்தனை அன்பா! "இதை சாப்பிடு முதல்ல. அப்புறம் பால் கொடு. போதும்" என்றாள் மது. பாசமாய் மகளை வாஞ்சையாய்ப் பார்த்தாள். அகிலா சொல்ல வேண்டாம் என்று நினைத்தும் தன்னை மீறி சொல்லிவிட்டாள். "நீயாவது எனக்கு மிஞ்சணும், மது."

இரவு வெகுநேரம் புரண்டு புரண்டு படுத்தாள் மதுமிதா. யோசித்து யோசித்துப் பார்த்தும் விளங்கவில்லை.

"நீயாவது எனக்கு மிஞ்சணும், மது," அம்மாவின் வார்த்தைகளுக்கு அவளுக்கு அர்த்தம் விளங்கவே இல்லை.

## 3

ரமேஷ் வீடு திரும்பிய போது, வாசல் புல்வெளியிலேயே ராஜசேகரும் பிருந்தாவும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். பிருந்தா ஆப்பிளை நறுக்கிக் கொண்டிருந்தாள்.

"என்னப்பா தூங்கப் போகலையா? மதுவை பத்திரமா விட்டுட்டேன்"

"குட்! நீ வரட்டும்னுதான் காத்திருக்கோம்-தூங்கப்போகாம..."

"என்னப்பா நான் குழந்தையா- தொலைஞ்சு போக?" என்றபடி அருகிலிருந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

"எத்தனை வயசானாலும் நீ எங்களுக்குக் குழந்தை தானே, ரமேஷ்." புன்னகையோடு ராஜசேகர் சொல்ல... ரமேஷ்,

"ஹையோ! அப்ப, எப்படி இந்தக் குழந்தையை மேல்படிப்புக்கு அமெரிக்கா அனுப்பப் போறீங்களாம்?" என்று அலுத்துக் கொண்டான்.





"உங்கம்மா உன்னை ஆபரேஷன் தியேட்டருக்கே கத்தியோட அனுப் புவாளானு சந்தேகம்தான், ரமேஷ்" ஓரக் கண்ணால் பிருந்தாவைப் பார்த்தபடி ராஜசேகர் கிண்டல் செய்தார்.

"போதுமே! உன்னைப் பொத்திப் பொத்திப் பாதுகாப்பதே உங்கப்பாதான்டா."

"ஆமாம், ஆமாம்... இத்தனை நேரம் நீ வீடு திரும்பலையேனு பதைபதைச்சுப் போய் புலம்பினது யாராம்? ரமேஷ், உங்கம்மா பயத்துக்கு உன்னையும் தன்னைப் போலவே செத்த பொணத்தை அறுத்து 'டிசன் ஸ்டேண்ட்'னு பாடம் நடத்ததான் அனுப்புவா... சொல்லிட்டேன்..."

பிருந்தா முறைத்தாள், "ஆசிரியர் தொழில் -அதிலும் மருத்துவத்தை போதிக்கறது-எத்தனை புனிதமானது தெரியுமா? அந்த ஆசிரியர்கள் இல்லாட்டி நீங்க பெரிய ஹார்ட்சர்ஜன்னு நகரில் ஏழடுக்குல மருத்துவமனை கட்டி குப்பை கொட்டியிருக்கமுடியுமா?"

பிருந்தா சீறினாள். பயந்தது போல் நடித்த ராஜசேகர், "ஐயோ தாயே, க்ஷமிக்கணும்! நான் ஆசிரியர் தொழிலை மட்டம் தட்டிப் பேசலை, என் மனைவியைத்தான்.

"ம், அப்படி வாங்க... மனைவியைத்தான் மட்டம் தட்டிப் பேசினீங்க"

"ஹையோ... ரமேஷ் உங்கம்மா டாக்டருக்கு படிச்சாளா வக்கீலுக்குப் படிச்சாளா? ஆயிரம் வியாதிக்கு மருந்திருக்கு. மனைவிகிட்டயிருந்து தப்ப என்னடா வழி."

மூவரும் கலகலவென்று சிரித்துவிட்டார்கள். சிரித்த வேகத்தில் பிருந்தா பழம் நறுக்கிய கத்தியை இசகு பிசகாய் இழுத்துவிட, அது அவள் இடக்கை கட்டை விரலை லேசாக கீறிவிட்டது. ராஜசேகர் துடித்துப் போய்விட்டார்.

"ஐயோ, பிருந்தா... இரு" என்று அவசரமாய் உள்ளே ஓடினார். ஃபர்ஸ்ட் எய்ட் கிட்டைப் பிரித்து மருந்து தடவி, பேண்ட் எய்ட் போட்டார்.

"ஐயோ, என்னங்க இது? சின்னக்கீறலுக்கு இத்தனை ஆர்ப்பாட்டம்

செய்யறீங்க?"

"அதானேப்பா. கத்தி பிடிச்க ஆப்பிள் வெட்டத் தெரியாத உங்கம்மா எப்படிடா உயிரோட இருக்கறவங்களுக்கு ஆபரேஷன் செய்வா? யப்பா, எல்லோரும் நல்லவேளை தப்பிச்சாங்க'னு கிண்டல் செய்யறதை விட்டுட்டு ஒரு சின்ன கீறலுக்கு ஆபரேஷன் லெவலுக்குப் போறீங்களே!"

ராஜசேகர் பதில் சொல்லாமல் புன்னகைத்தார்.

பழத்துண்டுகளை கணவனிடமும் மகனிடமும் நீட்டிய பிருந்தா, "காலையில ஆறு மணிக்கு ஒரு ஆஞ்சியோ இருக்கே. போய்ப் படுங்க," என்றாள்.



"சரி, நான் அஞ்சு மணிக்கெல்லாம் கிளம்பிடுவேன். நீ காப்பி கொடுக்க டிபன் செய்யனு அதிகாலையில எழுந்து உன்னை அலட்டிக்கவேண்டாம். புரியுதா? குட்நைட் சொல்லிவிட்டு நாலு துண்டுகளை வாயில் போட்டுக் கொண்டு நகர்ந்தார் ராஜசேகர்.

"அப்பாவுக்கு உன்மேல எத்தனை அக்கறைம்மா!" என்றவன்

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே" என்று பாரதி பாடலை லேசாக இழுத்தான். அர்த்தத்துடன் அம்மாவைப் பார்த்தான். ஆப்பிள் துண்டுகளை வாயில் போட்டுக் கொண்டான். என்னடா பாட்டெல்லாம் பிச்சுக்கிட்டு வருது?"

"உன்னையும் அப்பாவையும் இப்படி அன்யோன்யமாப் பார்க்கும்போது, இந்தப் பாட்டுத்தாம்மா நினைவுக்கு வருது. எவ்வளவு சந்தோஷமா முன்னோர் பத்தி பாரதி பாடியிருக்கார். உங்களை மாதிரி அப்பாம்மா அவருக்கு இருந்திருக்கணும், சரியா? உங்க ரெண்டு பேருக்கும் மகனாப் பிறக்க நான் கொடுத்து வச்சிருக்கணும்மா."

கண்களில் பெருமை பொங்க பேசும் மகனை வாஞ்சையாய் பார்த்தாள் பிருந்தா. பின், செல்லச் சிணுங்கலாய், "போடா வாயரட்டை" என்றாள்.

"எல்லா வீட்லயும் இப்படித்தான்"

"இல்லம்மா. இவ்வளவு அன்யோன்யம், அன்பு... அபூர்வம். ஏன் குமார் அங்கிள் வீட்ல கூட இப்படி இல்லையே..."

பிருந்தாவின் முகம் சட்டென்று வாடியது.

அதை கவனிக்காத ரமேஷ், "குமார் அங்கிள் வீடு மாதிரிதான் பல பேரும் இருக்காங்க. நம்ம வீடு நிச்சயம் மாறுபட்டதும்மா. இல்ல? உனக்கு அப்பாவும், அப்பாவுக்கு நீயும், எனக்கு நீங்க ரெண்டு பேரும் கிடைச்சது வரம்."

மகன் பேசப்பேச பெருமூச்சு விட்டாள் பிருந்தா. "சரி... காலையில ஒரு கேஸ் இருக்கு. சீக்கிரம் போகணும்னு சொன்ன இல்ல? போ, போய்ப்படு. நம்ம வீட்டைப் பிறகு புகழ்ந்துக்கலாம்" என்றாள், பேச்சை வளர்க்க விரும்பாமல்.

மகன் பாரதி பாடலை விசிலடித்தபடி போவதைப் பார்த்தாள்.

'நமக்கு ராஜசேகர் கிடைச்சது வரம்தான்டா, மகனே. ஆனா, அவருக்கு நான். அவர் வாழ்வில் நான் குறுக்கிட்டது நிச்சயம் அவருக்கு வரம் இல்லடா. இந்த நல்லவருக்கு நான் என்ன பரிகாரம் செஞ்சு என் பாவத்தைப் போக்கப் போறேன்?' வெளியே சொல்லமுடியாத ஊமைவலிக்கு வலிமை அதிகம்தான். அவள் அழுதாள்.

## 4

**வா**ரம் ஒன்று ஓடியது...

அகிலா ஸ்வாமி விளக்கேற்றி விட்டு நமஸ்கரித்தாள். கேசட்டில் எம்.எஸ் 'குறை ஒன்றும் இல்லை' என்று கண்ணனிடம் உருகிக்கொண்டிருந்தார்.

"டிபன் ரெடியாம்மா?" என்று தட்டை எடுத்துவைத்துக் கொண்டு உட்கார்ந்தாள் மதுமிதா.

**இ**ந்திய ஆடை வடிவமைப்பாளர்கள் இப்போது அழகிய ஆடைகளுக்குத் தக்கவாறு அழகிய பைகளையும் வடிவமைக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

-க.ரவீந்திரன்

கடச்கட அவள் தட்டில் பொங்கலைப் போட்டு சட்னியையும் சாம் பாரையும் ஊற்றினாள்.

"அப்பா எங்கே? சீக்கிரமே கிளம்பிப் போயிட்டாரா என்ன?"

"இல்ல மது," என்றவள் குமாருக்கும் தட்டை எடுத்து வைத்துக் கண் ணாடி டம்ளரில் தண்ணீரையும் ஊற்றினாள்.

"எதுக்கு பயப்படறீங்க. ரெண்டே ரெண்டு அடைப்பு. என்கிட்ட ஒப் படைச்சுட்டீங்க இல்ல. என்ன பயம்? நான் பார்த்துக்கறேன்... சரி, சரி... நான் பார்த்து சேருங்க... முன்னாடியே எனக்கு இன்பார்ம் செஞ்சுடுங்க... ஓ.கே."

மொபைலில் பேசியபடி வந்து அமர்ந்தார் குமார். ஆபரேஷன் தொடர்பாய் இது போன்ற உரையாடல்களைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போன அகிலா, அதை ஒரு பொருட்டாகவே நினைக்காமல் பொங்கலைப் பரிமாறத் துவங்கினாள். தொடர்பைத் துண்டித்துவிட்டு குமார் சாப்பிடத் துவங்கும்போது, மெல்ல அகிலா, "நாளைக்கு என்ன நாள்னு ஞாபகம் இருக்கா?" என்றாள்.

அவள் முகத்தில் ஆர்வம். சிறு குழந்தை மிட்டாயை எதிர்பார்ப்பது போல் பார்த்தாள். மருத்துவமனையில் அன்று நடக்க இருந்த முக்கிய அறுவை சிகிச்சை பற்றியும் மாலை நட்சத்திர ஓட்டலில் ஏற்பாடாகி இருந்த செமினாரில் பேசவேண்டியவை பற்றியும் சிந்தனை வயப்பட்டிருந்த குமார் மனைவியின் உணர்வை சற்றும் புரிந்து கொள்ளவில்லை.

இயந்திரத்தனமாய், "சனிக்கிழமை," என்றார்.

தலையில் அடித்துக் கொண்டு எழுந்து போனாள் அகிலா.

குமார் புரியாமல் மகளைப் பார்க்க, அவள் ஜாடையாய் அவரைச் கட்டிக்காட்டி தாலிகட்டுவது போல் அபிநயித்தாள்.

புரிந்து கொண்டார் குமார். 'ஓ!' சமையலறைக்குள் சென்ற மனைவி காதில் விழும் வண்ணம் அதே சமயம் ரகசியம் பேசும் பாவனையில்,

"மதுடா, நாளைக்கு எங்க வெட்டிங் டே. உங்கம்மாகிட்ட நான் தெரிஞ்சதா காட்டிக்கலை. என்ன கிஃப்ட் வாங்கலாம் அவளுக்கு?" என்றார்.

சின்னக் குழந்தை போல் வெளியே ஓடிவந்தாள் அகிலா.

"தெரிஞ்சுக்கிட்டே தான் அப்படி சொன்னீங்களா?"

மனைவியை ஆழமாய்ப் பார்த்தார்.

மயிரிழையைவிட மெல்லிய ரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படும்போது, மாற்றுப் பாதை அமைக்கும் அந்த நுண்ணிய வேலைப்பளுவை இவள் அறிவாளா?

இதயம் துடிக்கும்போதே அறுவை சிகிச்சை செய்யும் அந்த பரபரப்பை உணர்வாளா?

அப்படியே இதயத்தைக் கழட்டி சரி செய்து மாட்டுவதோ, செயற்கை இதயம் பொருத்துவதோ அவரவர் உடல்நிலைக்கேற்ப உயிரோடு விளை



யாடி, விதியோடு ஜெயிக்கத் தான் போராடும் ஒவ்வொரு கணங்களும் தனக்கேற்படும் மன அழுத்தத்தைப் புரிந்து கொள்வாளா?

புதிதாய் மலார் கோஃப்தா செய்ததையும் வேடல் ஜெப்பில் நாலு வார்த்தை பேசியதையுமே சாதனையாய் பேசும் இவள் உலகம் மிகச்சிறியது.

இந்த இருபது வருடங்களில் இவளுக்காக அவர் விட்டுக் கொடுத்தது தான் எத்தனை?

தன்னையே, தன் வாழ்வையே விட்டுக் கொடுத்திருக்கிறார். அந்த உண்மைகள் தெரிந்தால் இவள் தாங்குவாளா? இந்தக் குழந்தை மனம் இப்படியே குதூகலிக்கட்டுமே!

மெல்ல சிரித்துக் கொண்டார்.

"என்ன, நம்ம வெட்டிங் டே கூட ஞாபகம் இருக்கா?"

"மறக்குமா, அகில்?" குமாரை ஆச்சர்யமாய்ப் பார்த்தாள் அகிலா.

"சரி, சின்னதா ஒரு பார்ட்டி வச்சிருக்கேன். நம்ம பரமு அங்கிள் குடும் பம், எங்க பெரியப்பா மகள் குடும்பம், உங்க தங்கை குடும் பம்-அவ்வளவுதான்- கூப்பிட்டிருக்கேன். சரியா சவ்விக் ஆறுமணிக்கு வந் துடுங்க. ஃபங்ஷன் 'நமக்காக 'நம்ம வீட்ல' நடக்குது. முக்கிய கெஸ்ட், எமர் ஜன்ஸினு சொல்லி பத்து மணிக்கு வந்து நிக்காதீங்க. புரியுதா?"

"சரி," என்று தலை அசைத்த குமார், "ஆமாம், ராஜா குடும்பத்தைக் கூப்பிடலையா?"

"எதுக்குக் கூப்பிடணும்? அவங்க என்ன நம்ம உறவா?"

'அதுக்கும் மேல். நீ வாழும் இந்த வாழ்வு...'

அவரால் சொல்லவும் முடியவில்லை. கோபத்தை அடக்கி நிதானமாய், "அகில், ராஜா என் காலேஜ் மேட். ஹாஸ்பிடல்ல என் பார்ட்னர். பள்ளி நாட்களிலிருந்து வருஷக்கணக்காப் பழக்கம். கூப்பிடாம எப்படி? பிருந்தாவும் என் கூட காலேஜ்ல படிச்சவ..."

மதுமிதாவிற்கு அப்பாவின் வாதம் சரியாகவேபட்டது. இரு குடும்பங்களுக்கும் இடையே எந்த நிகழ்ச்சியானாலும் இதுவரை ஒருவரைவிட்டு ஒருவர் கொண்டாடியதில்லை. இரண்டு தினங்களுக்கு முன் பிருந்தா கூட பேச்சுவாக்கில், "மது, அம்மாவுக்கு வெட்டிங்டே வருதே. என்ன வாங்கட்டும்? அவங்களுக்கு இப்ப ஏதாவது தேவையா?" என்றார். கூப்பிடா விட்டால் அப்பா-ராஜா அங்கிளையும், தான்-பிருந்தாமே'மையும் எப்படி நேருக்கு நேர் மறுநாள் பார்க்கமுடியும். வீட்டில் இருக்கும் அம்மாவுக்கு இது புரிவதில்லை.

இந்த இருவர் கஷ்டமும் புரியாமல் அகிலா ஆர்ப்பாட்டமாய், "ஹாங்... அப்படிச் சொல்லுங்க! அந்த 'பிருந்தா' பி... ருந்...தா' அவ வரணும். அதானே உங்க ஆசை?" தலையை ஒடித்து புருவம் உயர்த்தி அபிநயித்தாள்.

"அகிலா, உனக்கு என்னாச்சு? வளர்த்த பொண்ணு எதிரே பேசற பேச்சாஇது?" குமாரின் குரலில் உஷ்ணம் ஏறியது.

"வளர்ந்த பொண்ணு இருக்கற வீடு இதுங்கற நினைவு இருக்கில்லையா?

இருந்தாச் சரி. பொறுப்பா நடந்துக்கங்க."

அப்படியே பாதிச் சாப்பாட்டில் எழுந்து போனார் குமார்.

மாலை எல்லாவற்றையும் மறந்தது போல், "வரியா ஏதாவது கிஃப்ட் வாங்கித் தரேன்." என்றார், குமார்.

"அந்த பிருந்தா வராம இருக்கறது தான் கிஃப்ட்" என்றாள் அகிலா நறுக்கென்று.

"உன்னைத் திருத்தவே முடியாது. உனக்கு கிறுக்குதான் பிடிச்சிருக்கு." இரவு இருவரும் பேசிக் கொள்ளவே இல்லை.

மறுநாள் காலை. நாலு பைபாஸ் சர்ஜரி இருந்ததால், சீக்கிரமே கிளம்பினார் குமார்.

"டிபனை டிரைவர்கிட்ட கொடுத்தனுப்பட்டா?" சம்பந்தமில்லாதவள் போல் கேட்டாள் அகிலா.

வேண்டாம் என்று சொல்ல நினைத்தார். அப்படிச் சொன்னால், அனாவசிய சண்டை வரும். அது ஒழுங்காய் அறுவை சிகிச்சை செய்ய முடியாமல் தன் அமைதியைக் கெடுக்கும். எதற்கு வம்பு என்று எண்ணியவராய், ''சரி'' என்றார்.

பெட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பியவர் நின்று,



டெல்லியில் காமனி அரங்கில் ஏழாவது உலகக் குழந்தைகள் விழா அண்மையில் நடைபெற்றது. இதில் குழந்தைகள் இத்தகைய சாகசக் காட்சிகளை நடத்திக் காட்டினார்.

-க.ரவீ

வளைப் போன்ற விட்டேத்தி தொனியில், "அம்பதாயிரம் ட்ரா பண்ணி பீரோல வச்சிருக்கேன். என்ன வேணுமோ வாங்கிக்க. போறாட்டி ஏ.டி.எம்., க்ரெடிட் கார்டுனு வச்சிருக்கியே. யூஸ் பண்ணிக்க."

"நாலு ஆபரேஷன்னா திரும்பி வர லேட்டாகுமா? ஆறு மணிக்கு எல்லோரும் வர ஆரம்பிச்சுடுவாங்க." அவளும் சுவர் பார்த்துப் பேசினாள்.

''எல்லாம் பை-பாஸ்தான். பிரச்சினை இல்லாட்டி சீக்கிரமே முடிஞ்சுடும்" அவளைப் பார்க்காமல் நடந்தபடி சொல்லியவர் போர்டிகோ வந்தார். இடைவெளி விட்டு பின்னால் வந்தவள், ''சாமியை வேண்டிக்கறேன்" என் றாள்.

நின்று திரும்பிப் பார்த்தார். குழந்தை போன்ற முகம். சமயத்தில் வாய் மட்டும் எப்படி விஷம் கக்கி விடுகிறது?

"எதுக்கு வேண்டிக்கப் போற? நான் ஆபரேஷன் நல்லபடி செய்யவா? சீக்கிரம் திரும்பவா?"

சுவரில் சாய்ந்து முகத்தை ஓடித்தவள், ''ஆபரேஷன் நல்லபடி முடியத்தான்."

சிரித்தபடி காரைத் திறந்து ஏறிக் கொண்டார்.

'தினமும் ராஜா அங்கிள் முகத்துல அப்பாவும் பிருந்தாமே'ம் முகத்துல நானும் முழிக்கணும்மா! புரிஞ்சுக்கோ. என்ன, அவங்களோட பகையா என்ன? ப்ளீஸ்ம்மா' முதல் நாள் மாலை மதுமிதா அம்மாவை சமாதானப்படுத்தி இருந்தாள்.

அதனால், "அவங்க குடும்பத்தை இன்வைட் பண்ணிடுங்க." என்றாள் அரைமனதாக. புன்னகையுடன் காரைக் கிளப்பிக் கொண்டு போனார் குமார்.

மதுமிதா மகளா, தங்கையா என்று புதிதாய் பார்ப்பவர் வியக்கும் வண்ணம் இளமையாய் அழகாய் மிளிர்ந்தாள் அகிலா. மூன்று நான்கு மிக நெருங்கிய உறவுக் குடும்பம் மட்டுமே அழைக்கப்பட்டிருந்ததால், தானே எல்லா ஐட்டங்களையும் சமைத்தாள்.

நாத்தனார், அண்ணி மாமா மகனின் மனைவி என்று மதியமே வந்துவிட்டவர்கள் அவளுக்கு உதவினார்கள். ஐந்து மணிக்கே விருந்தை தயாரித்து முடித்தவர்கள், கல்யாணத்திற்குக் கிளம்புவது போல் ஜம்மென்று ஆறு மணிக்குள் தயாராகி விட்டார்கள். மதுமிதாவும் அரைநாள் விடுப்பில் வந்துவிட்டாள். அத்தை, மாமன் வாரிசுகளோடு அவள் பொழுது கலகலவென்று ஓடியது. அண்ணன், நாத்தி கணவர், மாமா என்று ஒவ்வொருவராக வர ஆரம்பித்தார்கள். கேலியும் கிண்டலுமாகப் பொழுது நகர்ந்தது... ராஜா குடும்பம் வரவில்லை.

மணி ஏழு.

குமார் வரவில்லை. "நாலு பைபாஸ் இன்னைக்கு." என்றாள். மணி எட்டு... குமார் வரவில்லை. மொபைலில் தொடர்பு கொண்டாள். அணைக்கப்பட்டிருந்தது. மணி ஒன்பது... குமார் வரவில்லை. மருத்துவமனைக்கே தொடர்பு கொண்டாள்.



"நாலு மணிக்கே டாக்டர் கிளம்பிட்டாரே மேடம். விஷயம் தெரியாதா உங்களுக்கு? டாக்டர் ராஜசேகரோட ஒய்ப் டாக்டர் பிருந்தா திடீர்னு உடல் நலம் சரியில்லாம அவங்க ஓர்க் பண்ணற மெடிக்கல் காலேஜ் ஹாஸ்பிடல்லயே அட்மிட் ஆயிருக்காங்க. டாக்டர் ரெண்டு பேருமே அவங்களைப் பார்க்க நாலு மணிக்கே கிளம்பிப் போனாங்க. வீட்டுக்கு வரலையா மேடம்?"

இணைப்பைத் துண்டித்தாள். மனம் துடித்தது.

அவள் வாடிய முகம் பார்த்து, "என்ன? என்ன?" என்று உறவு பதறியது. சட்டென்று சமாளித்துக் கொண்டாள்.

"ஒ... ஒண்ணுமில்லை. ஏதோ எமர்ஜன்ஸி கேசாம். டாக்டர் தொழில்ல இதெல்லாம் சகஜம் தானே. நாம சாப்பிடலாம் வாங்க. அவர் வரும்போது வரட்டும்."

அம்பதாயிரம் கொடுத்துவிட்டால் கணவனின் கடமை

> கூடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதா? என்பது பழமொழி. ஆனால் மும்பையில் கடந்த பிள்ளையார் சதுர்த்தியை முன்னிட்டு முழுவதும் தேங்காய்களைக்கொண்டே ஒரு பிள்ளையாரை பக்தர்கள் உருவாக்கினார்கள். இதற்காக 55054 தேங்காய்கள் பயன்படுத்தப்பட்டன வாம்!
>
> -க.ரவீந்திரன்



தீர்ந்துவிட்டதா? தான் என்ன மனைவியா, வேறு மாதிரி பெண்ணா? ஒரு நல்ல நாளில்- திருமண நாளில்-மனைவி அருகே இருக்கவேண்டியவர்... என் கூட வேண்டாம்... சே! ஏன், அவளுக்குக் கணவன், பிள்ளை என்று உறவுகள் இல்லையா? நாலு மணிக்குப் போனவர் ஆறு மணிக்குள்- அது கூட இல்லை-எட்டு மணிக்குள்ளாவது திரும்ப முடியாதா? எமர்ஜென்ஸி என்றால், அவள் கணவரும் டாக்டர்தானே. ஊரில் வேறு எத்தனை டாக்டர்கள் இல்லை, மருத்துவக் கல்லூரியில் இல்லாத டாக்டர்களா? இத்தனை உறவுகள் முன் ஒரு ஃபோன் கூட செய்து சொல்லாமல் தன்னை அம்போ என்று விட்டுவிட்டு, அவளுக்கு ஒன்று என்றவுடன் துடித்துக் கொண்டு ஓடுகிறாரே. சே! என்ன மனுஷர் இவர்.

மூக்கு விடைக்க, கண்களில் கண்ணீர் நிறைந்தது. கஷ்டப்பட்டு அதை அடக்கிக் கொண்டு, சிரிப்பை போலியாய் மாட்டிக் கொண்டு வளைய வந்தாள். விருந்து அரை மணியில் முடிய எல்லோரும் கிளம்பிவிட்டார்கள்.

அம்மாவின் மனநிலை தெரிந்து மதுமிதாதான் முன்நின்று விருந்தினரை கவனித்து அனுப்பினாள். மணி பத்து. உடை கூட மாற்றாமல் சோபாவில் சாய்ந்தாள் அகிலா. அதற்கு மேல் அடக்க முடியாதவளாய்,

"உங்கப்பா செஞ்ச காரியத்தைப் பார்த்தியா?" என்று அவள் கத்தும் போது, குமாரின் கார் போர்டிகோவில் நுழைந்தது.

## 5

"டேய், சிம்பிளா ஏதோ பார்ட்டிக்கு அரேன்ஜ் பண்ணியிருக்கா அகிலா. குடும்பத்தோட வந்துடு" என்று ராஜசேகரிடம் அன்று காலையில் சொன்னபோது கூட, இருவராலும் பார்டிக்குப் போக முடியாமல் போகும் என்று நினைக்கவில்லை, குமார்.

"நீ கூப்பிடணுமாடா? பிருந்தா அகிலாவுக்காக ஏதோ வாங்கி வச்சிருக்கா. இப்படி வேலைக்கு ஓடி வரவேண்டிய நிர்ப்பந்தம் இல்லாட்டி, முதல் ஆளா காலையிலயே உன் வீட்டில் தான் வந்து நின்னிருப்போம்."

ராஜசேகர் சொல்லச் சொல்ல, குமார் நெகிழ்ந்து போனார். அகிலா அனாவசியமாய் செய்யும் ஆர்ப்பாட்டங்கள் அவரை குன்றச் செய்தது. கவனத்தை திசை திருப்பி வேலையில் ஈடுபட்டார்.

அன்று நடந்த அறுவை சிகிச்சைகள் எல்லாமே சிக்கல் இல்லாமல் நடந்ததால் நாலு மணிக்கெல்லாம் அவர் ஃப்ரியாகிவிட்டார். ஹாஸ்பிடல் ரவுண்ட்சை சீக்கிரமே முடித்துக் கொண்டு கிளம்பிவிடலாம் என்று வார்டுகளில் நுழைந்தபோது தான், ராஜசேகர் பரபரப்பாய் ஓடிவந்தார்.

"என்ன ராஜா? ஏன்?"

"ரமேஷ் ஃபோன் செஞ்சாண்டா. பிருந்தா பாதி வகுப்பில் தலைசுத்தி கீழே விழுந்து அங்கயே அட்மிட் ஆகியிருக்காளாம். எனக்கு கையும் ஓடலை, காலும் ஓடலை..."

குமாருக்கும் படபடப்பு ஏற்பட்டது. ஆனாலும், கட்டுப்படுத்திக் கொண்டு, "ராஜா ரிலாக்ஸ். ஒரு டாக்டரான நீயே இப்படி உடையலாமா? ஒண்ணுமிருக்காது. விரதம் அது இதுனு பிருந்தா ரொம்ப தன்னை வருத்திக்கறா... வா, போய்ப் பார்ப்போம்."

"பிரெஷர் ஏறியிருக்குமோ?"

"எதுவா இருந்தாலும் பார்த்துடுவோமே. நீயே டாக்டர் இல்லையா?"

"ஊருக்குத்தான் டாக்டர். சொந்த மனுஷங்களுக்குனு வரும்போது..." என்ற ராஜசேகர் பாதியில் நிறுத்தி சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டார். குற்ற உணர்வோடு தயக்கமாய் குமாரை நிமிர்ந்து பார்த்தார்.

சிரித்தபடி குமார் ஆதரவாய் 'இட்ஸ் ஓகே' என்பது போல் அவர் முதுகு தட்டிக் கொடுத்தவர், தனக்கு அடுத்த நிலையில் உள்ள டாக்டரை அழைத்து மடமடவென்று ஆணைகளைப் பிறப்பித்தார். ராஜசேகரையும் தன் காரிலேயே ஏற்றிக் கொண்டு மருத்துவக் கல்லூரி நோக்கிப் பறந்தார். ராஜசேகர் பேசவேயில்லை. மனதின் டென்ஷன் முகத்தில் பிரதிபலித்தது. குமார் மனதில் குறித்துக் கொண்டார்.

டாக்டர் குழு பிருந்தாவை சூழ்ந்திருந்தது. இவர்களைப் பார்த்தவுடன் ரமேஷ் ஓடிவந்தான்.

"எ... என்னடா அம்மாவுக்கு?"

"ரிலாக்ஸ் டாட். ஏன் இப்படி டென்ஷனாகறே. இருக்கற நிலையைப் பார்த்தா உனக்கும் பக்கத்துல ஒரு பெட் தயார் செய்யணும் போலிருக்கே."

"அதை விடு. பிருந்தாவுக்கு என்ன?"

"நான் ரிலாக்ஸ்டா இருக்கறதுலயே புரிஞ்சுக்க வேணாமா? ஜஸ்ட் பிரெஷர் ஷூட்-அப் ஆயிருக்கு. நேத்து வெள்ளிக்கிழமைனு விரதம். சாப்பிடாம இருந்திருக்காங்க."

"எத்தனை தடவையா சொல்றது அவகிட்ட... இந்த விரதத்தையெல்லாம் விட்டொழினு. சரி போய்ப் பார்க்கலாம்?"

"பெரிய டாக்டர்தான் பார்க்கறார். நீ வந்திருக்கேனு சொல்றேன்."

ரமேஷ் உள்ளே போக, ராஜசேகர் நகம் கடித்தார். நெற்றியின் சுருக்க வரிகள் அவர் கவலை சொல்லியது.

'ராஜா, நீ பிருந்தாவை இந்த அளவு நேசிக்கத் துவங்கிட்டியா?'-குமாரின் மனதில் ஏற்பட்டது சந்தோஷமா பொறாமையா? அவருக்கே புரியவில்லை. ஆனால், அது சந்தோஷமாக மட்டுமே இருக்கவேண்டும் என்றுவிரும்பினார்.

அடுத்த அரைமணியில் பிருந்தா கண் விழித்து விட்டாள். ராஜசேகர் பாய்ந்து உள்ளே ஓடினார். பெரிய டாக்டர் இவர்கள் இருவரும் டாக்டர்கள் என்பதால், அவள் நிலை பற்றித் தெளிவாகவே கூறினார். மாத்திரைகள் பற்றிச் சொன்னார். இறுதியாக, "ஆஸ் எ டாக்டர் யூ நோ! பிரெஷர் கண்ட்ரோல்ல இருக்கறவரை நோ ப்ராப்ளம். நல்ல டயட், வாக்கிங், ரிலாக்ஸ்ட் லைஃப் ஸ்டைல் அவசியம். அவங்களுக்கு என்ன டென்ஷன்? மெடிக்கல் காலேஜ்ல-நம்மை மாதிரி பேஷண்ட்களோட போராட வேண்டிய அவசியம் இல்லாம-ஸ்டூடண்ட்ஸோட பழகற இனிய சூழல். எனக்குத் தெரிஞ்ச இங்க அவங்களுக்கு நோ ப்ராப்ளம். வீட்லயும் நல்ல கணவர். ஒரே மகன். கோல்ட்மெடல் வாங்கற பையன். நல்லா சம்பாதிக்கற கணவன். என்ன பிரச்சினை? டாக்டர் பிருந்தா, வாட்ஸ் பைட்டிங் யூ?"

ராஜசேகரும் குமாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பெரிய டாக்டரின் கேள்விக்கு அவளால் சோகையாய் ஒரு புன்னகையைத் தான் பதிலாய்க் கொடுக்க முடிந்தது.

"சரி, டேக் கேர். வீட்ல இவங்களை கவனிக்க பெண்கள் யாரும் கிடையாது இல்லையா? இங்கயே ரெஸ்ட்ல ரெண்டு நாள் இருக்கட்டும்."

"சரியா சாப்பிட மாட்டாங்க, டாக்டர். அதுதான் பெரிய பிரச்சினை. கொஞ்சம் சொல்லுங்க ஸ்டிரிக்டா. பாதி நேரம் விரதம்தான். நீங்க சொல்றா மாதிரி நானும் அப்பாவும் நல்லா இருக்க, இவங்க எதுக்காக இப்படி தன்னை வருத்திக்கணும்?" படபடவென்று பொரிய ஆரம்பித்த ரமேஷ், முடிக்கும்போது தழுதழுத்துவிட்டான். பெரிய டாக்டர் கண்விரிய அவனைப் பார்த்தார்.

"யுவார் ரைட், ரமேஷ். டாக்டர் பிருந்தா இத்தனை அருமையான மகன் உங்களுக்கு இருக்க, என்ன கஷ்டம்? சரியான நேரத்துக்கு சாப்பிடுங்க. தூங்குங்க. கவலைப்படாதீங்க." என்றவர் மணி பார்த்துவிட்டு, "சரி, நான் கிளம்பறேன். டேக் கேர்" என்று நகர்ந்தார்.

குமார் ரமேஷின் தலையை செல்லமாய்க் கோதினார்.

"பரவாயில்ல, ரமேஷ்! அம்மான்னா அத்தனை பிரியமா? உன்னைப் பெத்த அப்பனுக்கு அவமேல இல்லாத அக்கறை உனக்காவது இருக்கே, சந்தோஷம்."

பிருந்தாவும் ராஜசேகரும் ஒரே நொடியில் அதிர்ந்தார்கள். அவர் சொன்னதின் முழு அர்த்தம் அவர்கள் உணர்ந்ததால் ஒரு நொடி வாயடைத்துப் போனார்கள்.

சூழல் புரியாத ரமேஷ் சீறிக் கொண்டு சொன்னான்.

"என்ன அங்கிள் நீங்க? எங்கப்பா கூடதானே வந்தீங்க. எப்படி துடிச்சப் போனாரு பார்த்தீங்க இல்ல. அபாண்டமா சொல்றீங்களே..."

அவன் சீற்றம் சூழல் மறந்து அவர்களை சிரிக்க வைத்துவிட்டது.

"அதுக்குச் சொல்லலை, ரமேஷ். உங்கம்மா சரியா சாப்பிடலைனு கவனிச்சு வச்சிருக்கே. உங்கப்பனுக்குத் தெரிஞ்சதா? அந்த ஆஸ்பத்திரிய கட்டி அழத்தான் தெரியும் அவனுக்கு. யப்பா... திரும்பி உங்கப்பனுக்குப் பரிஞ்சுகிட்டு வராதே. அவன் நீ பொறக்கறதுக்கு முன்னாடிலயிருந்து

எனக்கு நண்பன். சொல்ல எனக்கு உரிமை உண்டு."

ரமேஷ் வெட்கச் சிரிப்புடன் ஓரமாய்ப் போய் அமர்ந்தான்.

நடந்த ஆர்ப்பாட்டங்களில் மணி போனதே தெரியவில்லை. பிருந்தா தான் கடிகாரம் பார்த்துவிட்டுப் பதறினாள்:

"ஐயோ நேரமாகுது. மணி ஏழரை. வீட்ல அகிலா காத்திருப்பா. நீங்க கிளம்புங்க குமார்."

குமாருக்கு அப்போதுதான் நினைவு வந்தது. சட்டென்று அவரை குற்ற உணர்வு சூழ்ந்தது. இங்கு இவர்களுக்குத் தான் செய்த துரோகத்திற்குப் பரிகாரமாய் எல்லாவிதத்திலும் உதவியாய் இல்லாமல் போனாலும் தப்பு. அங்கு எதிர்பார்த்துக் காத்திருக்கும் மனைவியிடம் போகாவிட்டாலும் தப்பு ஒரு நொடி சே, என்ன வாழ்க்கை இது! என்று நொந்துபோனார்.

"பரவாயில்லை, பிருந்தா, ராஜாவும் ரமேஷ"ம் ஆடிப்போயிருக்காங்க. நான் கொஞ்ச நேரம் இருந்துட்டே போறேன்."

"இல்ல, குமார். சொன்னாக் கேளுங்க. அகிலா அங்கே உங்களுக்காகக் காத்திருப்பா... எனக்கு ஒண்ணுமில்லை. நர்ஸ் எல்லோரும் தெரிஞ்சவங்க. நல்லா பார்த்துப்பாங்க. நீங்க மூணு பேருமே கிளம்புங்க. ரமேஷ், போற வழியில நம்ம வீட்டுக்குப் போயி ஃப்ளாஸ்கை எடுத்துக்கிட்டுப் போ."

"இல்ல, உன்னை இப்படி விட்டுட்டு நான் போகமாட்டேன்," என்று தீர்மானமாய் அங்கு அமர்ந்துவிட்டார் ராஜசேகர்.

"சொன்னாக் கேளுங்க."

நர்ஸ் வந்து சலைன் பாட்டிலை மாற்றினாள்.

"நான் சொல்றதை இனி நீ கேளு," என்றார் ராஜசேகர் கறாராய். ரமேஷே அந்தக் குரலில் ஆடிப்போனான்.

"ராஜா சொல்றது சரிதான் பிருந்தா. அவன் இங்க இருக்கட்டும்." குமார் ராஜசேகர் முதுகில் தட்டிக்கொடுத்தார்.

"ஆமாம்மா, அப்பா அநியாயத்துக்கு டென்ஷனாயிருக்காரு." என்றான் பாதி கிண்டலாய் பாதி சீரியஸாய், ரமேஷ்.

"இருக்காதா பின்ன? ரமேஷ் டாக்டருக்குக் கல்யாணமான பிறகு பொண்டாட்டிக்காக எப்படி உருகப் போறாருனு நானும் பார்க்கத்தானே போறேன். மனைவிங்கற உறவு எப்படிப்பட்டதுனு அப்பத்தான் புரியும் சரியா?" நர்ஸ் உரிமையாய் அதட்டினாள்.

சட்டென்று நிமிர்ந்த ராஜசேகரின் கண்கள் குமாரின் கண்களை சந்தித்தவுடன் குற்ற உணர்வோடு தழைந்தன. குமார் வெளியே வந்து வராந்தாவில் நின்றார். இருபது வருட உணர்வுப் போராட்டம் இது. இன்று சற்று அதிகமாய் அழுத்துவதாய்ப்பட்டது.

பின்னாடியே வந்த ரமேஷ், "அங்கிள், கொஞ்சம் அம்மாவைப் பார்த்துக்காங்க. அப்பாவைக் கூட்டிப்போய் ஏதாவது சாப்பிட வச்சு, அம் மாவுக்கும் இட்லி வாங்கிக்கிட்டு வந்துடறேன். நாம விட்டுட்டுக்





கிளம்பினா, அப்பா சாப்பிடாமலே ஏமாத்திடுவாருனு அம்மா கவலைப்படறாங்க." என்றான்.

"தாராளமா, ரமேஷ்... நீ இங்க சாப்பிட்டுடாதே. வீட்ல விருந்திருக்கு!"

"ஓ. யா! சீக்கிரமா வந்துடறேன். ஏற்கனவே ரொம்ப லேட்டாயிடுச்சில்ல."

"பரவாயில்லை. அகிலாகிட்ட சொல்லிக்கலாம். டேக் யுர் ஒன் டயம்."

ராஜசேகரும் வெளியே வந்தார்.

"தேவைப்பட்டா செடேட்டிவ் கொடுக்கச் சொன்னாரே டாக்டர். ரொம்ப டிஸ்டர்ப்டா இருக்காளே. கொடுத்துடலாம்?"

"கொடுக்கலாமே, தப்பில்லை." என்றார் குமார்.

"நீங்க பேசிக்கறது ஒரு பாமரனும் அதி அற்புத புத்திபடைச்ச டாக்டரும் பேசிக்கறா மாதிரி இருக்கு. பேசாம வாப்பா," என்று ராஜசேகரை இழுத்துப் போனான் ரமேஷ்.

"உள்ள போய் அவளைப் பார்த்துக்கோடா. பத்து நிமிஷத்துல வந்துடறோம்." சொல்லியபடியே போனார் ராஜசேகர்.

குமார் உள்ளே நுழைந்தபோது, கண் மூடி படுத்திருந்தாள் பிருந்தா. இவர் உள்ளே நுழைந்த சலனத்தில் கண் விழித்துப் பார்த்தாள்.

"தூக்கம் வந்தா தூங்கு பிருந்தா."

அவள் விரக்தியாய் சிரித்தாள்.

"என்ன பிரச்சினை உனக்கு? கடந்த காலத்தை... முழுசா மறந்துடு."

"கடந்த கால கசப்புக்களை மறந்துட்டேன், குமார்."

"பிறகு என்ன. அடி மனசுல என் மேல வெறுப்போ என்னைப் பழி வாங்கணுங்கற எண்ணமோ உன்னையறியாம உன்னை வாட்டுதா?"

குமாரை ஆழமாய் நோக்கினாள்.

"என் கண்ணைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேளுங்க."

"இ... இல்லை..."

"அப்ப எடுத்த முடிவுக்கு நான்தான் பொறுப்பே தவிர நீங்க இல்லை. அதனால, உங்க மேல வெறுப்பு கிடையாது. நான் அனுபவிச்ச வேதனைகள் உங்களுக்கும் உண்டுனு எனக்குத் தெரியும். பிறகு எதுக்கு நான் உங்களை வெறுத்துப் பழிவாங்கணும்? வாழ்க்கை என்ன டிவி மெகா சீரியலா யாராவது யாரையாவது பழிவாங்க"

"அப்ப உன்னை எது வாட்டுது? ஏன் இப்படி பி.பி.எகிறணும்?"

"கசப்புக்களுக்கிடையே ஒரு தெய்வப் பிரசாதமாய் எனக்கு ராஜசேகர் கிடைச்சிருக்கார். அவருக்கு... அவருக்கு... நான் என்ன கைமாறு... வயசாக ஆக பயமா இருக்கு, குமார்."

அவள் சட்டென்று கலங்கிவிட்டாள். குமாரால் என்ன ஆறுதலை வழங்கமுடியும்?

"காலம் நல்ல மருந்து பிருந்தா. எல்லாத்துக்கும் வழி பிறக்கும். நீ இப்பத் தூங்கு. ப்ளீஸ்."



அவள் மெல்ல கண்மூடிக் கொண்டாள். குமார் மௌனமாய் புத்தகம் ஒன்றைப் புரட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அரைமணியில் ரமேஷும் ராஜசேகரும் வந்தார்கள்.

"நான் பார்த்துக்கறேன். நீங்க கிளம்புங்க."

வழியில் ரமேஷ் தங்கள் வீட்டில் காரை நிறுத்தி பரிசுப்பொருட்களை எடுத்துக் கொண்டான். எத்தனை வேகமாய் வண்டியை ஓட்டியும், டிராபிக்கில் மாட்டி வீடு போய்ச்சேர ஒரு மணி நேரம் பிடித்தது.

வீட்டில் வண்டி போய் நின்றபோது மணி பத்து...

"உங்கப்பா செஞ்ச காரியத்தைப் பார்த்தியா?" என்று அகிலா கத்துவது போர்டிகோ வரை கேட்டது. குமார் ஒரு நொடி அவமானத்தில் குன்றினார். ரமேஷை கூட்டி வந்திருக்க வேண்டாமோ என்று கூட தோன்றியது. சமாளித்துக் கொண்டு, "வா ரமேஷ்," என்று உள்ளே நுழைந்தார்.

ரமேஷோடு அப்பாவைப் பார்த்தவுடன் மதுமிதாதான் உஷாரானாள். ரமேஷ் பரிசுப்பொருட்களை அகிலாவிடம் கொடுத்தான்.

"ஹாய் ரமேஷ். வா, வா. பசியா வந்திருப்பீங்க. அப்பா டிரெஸ் மாத்தி வாங்க. சாப்பிடலாம். ரமேஷ் நீ டைனிங் ஹாலுக்கு வா. அம்மா இப்ப எப்படி இருக்காங்க? என்னாச்சு?" என்று பேசியபடியே சூழலை சகஜமாக்கி அவனை உள்ளே அழைத்துப் போனாள்.

மகள் ஏற்படுத்திக்கொடுத்த தனிமை தான் தன் மனைவியை சமாதானப்படுத்தத்தான் என்பது அவருக்குப் புரிய, "அகில்," என்றார் மெதுவாக.

பளிச்சென்று கையிலிருந்த பிருந்தாவின் பரிசுப்பொருட்களை அவர் முன் விட்டெறிந்தவள் விருட்டென்று போய் அறைக்குள் புகுந்து கதவை சாத்திக் கொண்டாள்.

அவசரமாய் பொருட்களை அள்ளி மேஜை மேல் வைத்தார். உள்ளே ஏதோ பொருள் உடைந்திருப்பது புரிந்தது. 'பிருந்தா நம்ம வாழ்க்கை போலவே நீ கொடுத்த பரிசுப் பொருளும் உடைஞ்சிருக்கும்மா!' குமாரின் கண்களும் கலங்கின.

## 6

அடுத்த இரு தினங்கள் இரு குடும்பங்களுக்குமே சற்று சோதனையாய் அமைந்தன. பிருந்தா சற்றுத் தேறித் தெளிவடைதாலும், ரமேஷும் ராஜசேகரும் ரொம்பவே பாதிக்கப்பட்டிருந்தார்கள். வீடு, வேலை, மருத்துவமனை என்ற அலைச்சல் வேறு. அவள் சற்று தேறி வீடு வந்தவுடன் இருவருமே 'அப்பாடா' என்று மூச்சுவிட்டார்கள்.

குமாரின் வீட்டில் நிலைமை வேறுவிதமாய் இருந்தது. அகிலா இரண்டு நாட்களும் குமாரின் முகத்திலேயே முழிக்கவில்லை. அவர் மருத்துவமனை

கிளம்பும்வரை அறையை விட்டு வெளிவரமாட்டாள். அதேபோல் அவர் வீடு திரும்பியதை கார் சப்தம் மூலம் உணர்ந்தாலே, இழே தன் அறைக்குள் சென்று கதவை சாத்திக்கொண்டு விடுவாள். வீட்டில் சரியாக சமையல் கிடையாது. மகளுக்காவது மாலை நேரங்களில் டிபன் கொடுப்பது, இரவு சாப்பாட்டை எடுத்து வைத்துவிட்டு அறைக்குள் போவது என்று இருந்தாள். குமாருக்கு சத்தமாக எதுவும் கிடையாது.

அவளுடன் பேசி தன் நிலையை எடுத்துக் கூற அவரும் எத்தனையோ முயன்றுதான் பார்த்தார். ம்ஹீம். ஊசி இடம் கொடுத்தால் அல்லவா நூல் நுழையும்! மகளிடம் நிலைமையைக் கூறினார். அவளால் அனுதாபப்படத் தான் முடிந்ததே தவிர, அம்மாவை சமாதானப்படுத்த முடியவில்லை. "அப் பா," என்று ஆரம்பித்தாலே அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொள்ளும் அம்மாவிடம் என்ன பேசிவிடமுடியும்?

இவள் வாடிய முகமும் மதியம் அவனைப் போலவே கேன்டீனில் சாப்பிடுவதும் ரமேஷிற்கு நிலைமையை எடுத்துச் சொல்லிவிட்டன.

"சாரி, எங்களால உங்க வீட்ல பிரச்சினை இல்ல." என்றான்.



அண்மையில் ஸ்டிஸ்ரே என்ற விஷ மீனால் கொல்லப்பட்ட ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்டீவ் இர்வின் (வயது 44) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் முதலைகளோடு சாகசம் நிகழ்த்தி புகழ்பெற்றவர். "இந்த ஜந்துக்கள் எந்த ஒரு நாளிலும் ஆளக்கூடும்" என இவர் அடிக்கடி சொல்வாராம். அவர் சொன்னபடியே நடந்துவிட்டதே!

-க.ரவீந்திரன்

"ஏ, என்ன பேசற நீ பைத்தியம் மாதிரி. நானே ஏதோ விருந்தாளிபோல உங்கம்மாவைப் பார்த்துட்டு வந்துட்டேன். மகளா என்னை நினைக்கறவங்க கூட இருந்து அவங்களுக்கு உதவமுடியலை பார்."

"உங்கம்மாவுக்கும் ரொம்ப ஏமாத்தமாத்தான் இருந்திருக்கும். இப்ப சமாதானமாயிட்டாங்களா இல்லையா?"

"ஓ! ஆயிட்டாங்களே" என்று பளிச்சென சொல்லத் தான் நினைத்தாள். ஆனால், பதினெட்டு வயதுச் சிறு பெண்ணிற்கு அத்தனை சுலபமாய் தன்னை மறைத்து உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசத் தெரியவில்லை. கண்கள் கலங்க தலைகுனிந்து கொண்டவள்,

"சமாதானமாயிடுவாங்க," என்றாள் மெல்லிய குரலில். அதேபோல், ராஜசேகரும் குமாரின் நடவடிக்கை மூலமே வீட்டில் பிரச்சினை, என்பதை உணர்ந்தார். ரமேஷ் மூலம் மேலும் விஷயம் உறுதிப்பட்டது.

கொடுக்கப்பட்ட சேலைன், ஊட்ட உணவுகள், மருந்துகள் ஒவ்வு ஆகியவற்றால் பிருந்தா தெம்பாகவே உணர்ந்தாள். வீட்டில் யாருக்கும் எதுவும் மறைத்துப் பழக்கமில்லாததால் குமார் வீட்டில் வீசும் புயல் பற்றி ரமேஷ் கூறிவிட்டான். ராஜசேகரிடம் இது பற்றி அவள் கேட்க, அவரோ திணறினார். அவள் உடல்நிலை கருதி அவளிடம் விஷயத்தை மறைக்க விரும்பினார். மகன் போட்டு உடைத்துவிட்டான். கேட்டால் "அவங்க வீட்டு விஷயம் தானேப்பா அம்மாவை என்ன பெரிசா பாதிக்கும்" என்பான். அவளை என்ன பாதிக்கும் என்று அவருக்குத் தானே தெரியும்!

இப்போது பதறிக் கேட்கிறாள். என்ன சொல்வது? "பங்ஷனுக்கு குமார் போகாததில் கொஞ்சம் அகிலா அப்செட். அவ்வளவுதான். கணவன் மனைவி ஊடல். தானே ரெண்டு நாள்ல சரியாயிடும். நாம என்ன செய்ய? பேசாம மனசை அலட்டிக்காம இரு பிருந்தா."

"நீங்க சொல்றது சரிதான். ஆனால், அவங்களுக்குள்ள பிரச்சினை வர நாம தானே காரணம். அந்தப் பொண்ணு மது முகமும் சரத்தாவே இல்லை."

"சரியாயிடும்."

"சரியாக்கணும்."

"என்ன சொல்றே?" என்றார் சற்று கலவரத்துடன்.

"நாம போய் அகிலாகிட்ட நிலைமையை எடுத்துக் கூறுவோம்."

ராஜசேகருக்கு இது சரியாகப்படவில்லை.

"வேண்டாமே. இதனால... இல்ல... நீ வந்து... இப்பத்தான் சரியாயிருக்கே. அங்க போய்."

"என்ன ஆயிடும், ராஜா? அகிலா மனுஷிதானே... புரிஞ்சுப்பா வி.ஆர் ஹெல்ப்பிங் குமார். தட்ஸ் ஆல்." ராஜசேகரை கெஞ்சலாய்ப் பார்த்தாள் 'என்னைப் புரிஞ்சுக்கயேன்' என்றன அவள் கண்கள். மகன் அருகில் இருப் பதை உணர்ந்து, "அவர் நமக்கு உதவி செஞ்சாரு. எதனால மனைவிக்கும் அவருக்கும்

தொடர்ச்சி 34-ம் பக்கம்

31-ம் பக்கத் தொடர்ச்சி

சண்டை. அப்ப அதை தீர்க்கறது நம்ம கடமை இல்லையா?"

ராஜசேகருக்கு விருப்பமே இல்லை. ஆனால், இதற்கு மேல் பிருந்தாவைக் கட்டுப்படுத்தமுடியாது என்பதை உணர்ந்தார். குமார் வீட்டில் தன்னால் பிரச்சினை என்பதே அவளை பாதிக்கலாம். அதனால, வேறு வழியின்றி,

"சரி, போகலாம்..." என்றார்.

ரமேஷ் வழக்கம் போல் கார் ஓட்டிப்போய் அவர்கள் வீட்டில் இருவரையும் இறக்கிவிட்டான். காரை ஓரமாய் நிறுத்திவிட்டு அவர்களைப் பின்தொடர்ந்து குமாரின் வீட்டிற்குள் நுழைந்தான்.

மதுமிதாதான் முதலில் இவர்களைப் பார்த்தாள். முகம் மலர உற்சாகமாய் வரவேற்றாள்.

"ஆன்ட்டி. முதல்ல ஜூஸ் குடிங்க. டயர்டா இருப்பீங்க," என்று பழரசம் கொண்டு கொடுத்தாள்.

"உபசரிப்பெல்லாம் 'ஆன்டிக்குத்'தான்டா. நீயும் நானும் கொசுறு" என்று ராஜசேகர் சீண்ட, "ஆமாம்ப்பா. வீட்ல 'பிருந்தா ஆன்டியை' நல்லா கவனிச்சா தானே காலேஜ்ல 'பிருந்தா மே'ம்' நிறைய மார்க் போட்டு கவனிப்பாங்க." ரமேஷ் ஒத்தூதினான்.

"படிப்பை முடிச்சுட்டு வேலைக்காக எங்க மருத்துவமனைக்குத் தானே வரணும். அப்ப வச்சுக்கறேன்." ராஜசேகர் விளையாட்டை எல்லோரும் சிரித்தார்கள்.

வெளியே கலகலவென்று பேசினாலும், உள்ளே,'இவர்கள் எதற்கு திடீரென்று வந்திருக்கிறார்கள்? அப்பா இன்னும் வரவில்லையே. அம்மா இவர் கள் வருகையை விரும்பமாட்டாளே' என்றெல்லாம் எண்ணிக் கலங்கினாள் மதுமிதா.

அவள் நினைத்தது போலவே, சிரிப்புச் சப்தம் கேட்டு ஹாலுக்கு வந்து எட்டிப் பார்த்த அகிலா, பிருந்தாவைப் பார்த்தவுடன் ரௌத்திரமானாள். நேராக வந்து முறைத்து,

"எதுக்கு வந்த? கவனிச்சயா நீ? உன் வீட்டுக்கு நான் வருவதை நிறுத்தி பல வருஷமாச்சு. நீ எதுக்கு இங்க வந்த? வெளிய நீ என் புருஷனோட கூத்தடிக்கறது பத்தலையா?"

கேள்வியின் ஆக்ரோஷத்தில் அர்த்தத்தில் அனைவருமே வாயடைத்துப் போனார்கள். ரமேஷ் தான் சற்று சுதாரித்துச் சீறினான்,

"ஆன்ட்டி, என்னாச்சு உங்களுக்கு? என்ன பேசறீங்கனு தெரிஞ்சு தான் பேசறீங்களா?"

"நான் தெரிஞ்சுதான் பேசறேன். என் புருஷனுக்கும் உங்க அம்மாவுக்கும் இடையே ஒண்ணுமில்லைனு உன்மேல சத்தியம் பண்ணச் சொல்லு உங்கம்மாவை! செய்யமாட்டா."

ரமேஷ் உடைந்துபோனான். பிருந்தா பொங்கிப் பொங்கி அழ ஆரம்பித்தாள்.



ராஜசேகர் துடித்துப் போனார்.

"அகிலா, யுவார் பிகமிங் நட்ஸ்... பிருந்தா, வா போலாம். இதுக்குத்தான் வரவேண்டாம்னு சொன்னேன். கேட்டியா? இப்பத்தான் உடல் தேறி எழுந்திருக்கே. உனக்கு இது தேவையா? போலாம் வா."

"அதையேத்தான் நானும் சொல்றேன் மிஸ்டர் ராஜசேகர். உங்க மனைவி சகவாசம் இங்க வேண்டாம். அதே தான் உங்க மகனுக்கும். அம்மாக்காரி என் புருஷனை கவர்ந்தா. பிள்ளை என் மகளைக் கவர்ந்துடுவானோனு பயப்படறேன். உங்களுக்கு மான ரோஷம் இல்லாம இருக்கலாம். எனக்கு இருக்கு."

காளி போல் உக்கிரமாய் கண் உருட்டி தலைமுடி புடவைத்தலைப்பு எல்லாம் பறக்க ஆட்டம் போடும் மனைவியின் கன்னத்தில் அப்போதுதான் எல்லாம் கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்த குமார் சட்டென்று அறைந்தார்.

ஒரு நொடி அப்படியே வலி பொறுக்காமல் உட்கார்ந்து விட்டாள் அகிலா. மதுமிதா செய்வது, பேசுவது அறியாமல், தனக்கு அடி விழுந்தது போல் தன் கன்னம் தடவிக் கொண்டு கீழே சுருண்டு அமர்ந்தாள்.

உட்கார்ந்த வேகத்தில் எழுந்த அகிலா கணவனிடம் கத்தினாள், "என்னை அடிங்க. அடிச்சுக் கொன்னுடுங்க. உங்க ரெண்டு பேருக்கும் இடையில தொந்தரவா நான்தானே இருக்கேன். கொன்னுடுங்க."

"ஆமாம். எங்க ரெண்டு பேருக்கும் இடையில வந்தவதான் நீ" அதே வேகத்தில் கத்தினார் குமார்.

அதுவரை ஸ்தம்பித்து அமர்ந்திருந்த பிருந்தாவும் ராஜசேகரும் பதட்டமாய், "குமார், வேண்டாம், ப்ளீஸ், உணர்ச்சிவசப்பட்டு பேசிட வேண்டாம். பசங்க வேற இருக்காங்க" என்று பதறினார்கள்.

"இல்ல ராஜா, பசங்களும் தெரிஞ்சுக்க வேண்டிய வேளை வந்துடுச்சு. இனியும் மறைச்சா அகிலா டிப்ரஷன்ல விழுந்துடுவா. தே மஸ்ட் நோ. நான் சொல்லத்தான் போறேன். அகிலா, கேளு. என் வாழ்க்கை ரகசியங்களை, உண்மைகளை மனசு திறந்து கொட்டப் போறேன். தயவு செஞ்சு கேளு."

## 7

சிறுவன் குமாருக்குப் பத்து வயதாகும் போது, அவன் அப்பா ஒரு விபத்தில் இறந்துபோனார். பத்து வயதில் மகனையும் எட்டு வயதில் மகளையும் வைத்துக் கொண்டு இவன் அம்மா செய்வதறியாது திகைத்துத்தான் போனாள். கல்வியறிவோ வேலையோ இல்லாதவள். பாவம், என்ன செய்வாள்?

வாழ்க்கைப்பட்ட கிராமத்தை விட்டு, ஆதரவுக் கரம் நீட்டிய தஞ்சை அருகே அண்ணன் ராசப்பன் வீட்டில் அடைக்கலம் புகுந்தாள்.

சின்ன கிராமம். அங்கே அண்ணன் பெரிய பண்ணை வீடும் ஏக்கர் ஏக்கராய் நிலங்களும் அரிசி மில்களும் வைத்திருந்தார். சாமான்யனின் மனைவியாய் வாழ்ந்து எந்த சொத்தோ சேமிப்போ இல்லாமல் அண்ணனிடம் அடைக்கலம் புகுந்த அன்னத்திற்கு அவருடைய பணபலமே பயத்தைத் தந்தது. அதுவும், அண்ணி சொத்தை ஆதாரமாய் வைத்து தொழில் ஆரம்பித்து இன்று தஞ்சையில் முக்கிய பணக்காரர்களுள் ஒருவராய் நிமிர்ந்து நிற்கிறார்.

இப்படிப்பட்டவர் வீட்டில் தன் நிலை என்ன? ராசப்பனின் தங்கை என்று பந்தா காட்டவும் முடியாது. அவரின் தங்கை என்பதால் வேலைக்காரியாகவும் நடந்து கொள்ள முடியாது.

கணவனின் திடீர் மறைவால் ஏற்பட்ட சோகம் அடி மனதில் புதைய, நிதர்சனமும் எதிர்காலம் பற்றிய பயமும் ஒருசேர மனதுள் எழுந்தன. இரண்டு சின்னக் குழந்தைகளைத் தொடர்ந்து படிக்க வைக்க முடியுமா? ஆனால் ஒரு விஷயத்தில் அன்னம் உறுதியாய் நின்றாள். தான் பட்டினி கிடந்தாலும் சரி, தன் குழந்தைகளுக்கு கல்விச் செல்வத்தை வழங்கிவிட வேண்டும்.

'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்பதை அந்தத் தாய் படித்து அறியவில்லை. ஆனால், தன் குழந்தைகள் படிக்க அவசியமானால்-பிச்சை எடுக்கவும் அவள் தயாராய் இருந்தாள். இங்கே அண்ணனின் வீட்டில் குழந்தைகள் எப்படி நடத்தப்படுபவார்களோ என்ற பயம் இருந்தது.

அதனால், மெல்ல அண்ணனிடம் ஒருநாள் பேசினாள்.

"அண்ணே, இ... இப்படியே உனக்கு பாரமா எத்தனை நாள் இருக்கறது? எனக்குப் பெரிசா உத்யோகம் போக படிப்பில்லை. உன் வீட்ல இருந்துகிட்டு நான் சாதாரண வேலைக்குப் போனா அது உனக்கு அழகில்லை. அ... அதனால, எனக்கு ஏதாவது சின்ன வேலை வாங்கிக் கொடுத்து, சின்னதா ஒரு ஓட்டு வீடா பார்த்து வச்சுடு அண்ணே. ரெண்டு பசங்களையும் கூழோ கஞ்சியோ கொடுத்து கவர்மெண்ட்டு ஸ்கூலுக்கு அனுப்பிப் படிக்க வச்சுடுவேன்."

தங்கையை ஆழ்ந்து நோக்கினார் ராசப்பன். ஒரு தாய் வயிற்றில் பிறந்து ஒரே வீட்டில் வாழ்ந்தவர்கள். ஒரு சிறு தாலிக்கயிறு இத்தனை பேதத்தை தந்துவிடுமா? தாலி கட்டிய கணவன் வீட்டில் ஒன்றுமில்லாமல் வந்து நிற்பதால் குன்றி நிற்கிறாள் தங்கை. தான் தாலி கட்டியதால் சம்பாத்தியமெல்லாம் தனதாக நிமிர்ந்து நிற்கிறாள் மனைவி. தன்னை நம்பி உடல் பொருள் எல்லாவற்றையும் ஒப்படைக்கும் மனைவி வாழ்வில் முக்கியமானவள்தான். ஆனால் அதற்காக கூடப்பிறந்த பிறப்பை கைவிட்டு விடமுடியுமா?

"உன் அண்ணி உன்னை ஏதாவது பேசினாளாம்மா?"

பதறிவிட்டாள் அன்னம். "ஐயோ அண்ணே, அப்படி ஏதாவது சொன்னா என் நாக்கு அழுகிடும். நானாத்தான்... புருஷனை சின்ன வயசுல பறிகொடுத்துட்டு நிக்கறேன்னு அண்ணி ரொம்ப ஆதரவா இருக்காங்க. ஆனா, நான் தனியா வரலையே அண்ணே. ஏதோ ஒரு வயிற்றை இத்தனை சோறால கழுவிட்டு மூலையில முடங்கிட... ரெண்டு குழந்தைகளைப் படிக்க வச்ச ஆளாக்கணுமில்ல."

நிதானமாய்க் கேட்டார் ராசப்பன்.

"அதுக்கு இந்த அண்ணனுக்கு வக்கில்லைனு நினைக்கறியா-உரிமை இல்லைனு நினைக்கறியா?"

அழுதுவிட்டாள் அன்னம்.

"என்ன அண்ணே இப்படி கேட்கறே?"

"பின்ன? அண்ணன் குத்துக்கல்லாட்டம் நல்லா இருக்கும் போது, தனியாப் போயி சம்பாதிச்சு பசங்களைப் படிக்க வச்சுக்கறேன்னு சொல்றியேம்மா... உனக்கு உன் அண்ணன் வீட்ல உரிமை இல்லையா? இத்தனை பெரிய வீட்ல உனக்கும் உன் குழந்தைகளுக்கும் ஒரு இடம் இல்லையா? என் வீட்டு வேலை ஆட்களே ஒரு பந்திக்கு வரிசையா உட்கார்ந்து சாப்பிடும்போது நீங்க மூணு பேர் சாப்பிடத்தான் நான் கணக்குப் பார்க்கப் போறேனா? என் தங்கை ஓட்டு வீட்ல கஞ்சி குடிக்கும் போது, எனக்கு இங்க விருந்து சாப்பாடு இறங்குமா? அதே, உன் புருஷன் இருந்தா நீ இத்தனை தன்மானம் பார்க்கறது நியாயம்... நானும் அதிகம் குறுக்கிட மாட்டேன் முன்ன ஏதோ அப்பப்போ சீர் செனத்தினு செஞ்சேன். எவ்வளவுதான். இப்ப நிலைமை அப்படியா?"

அவள் அப்படியே அவர் காலில் விழுந்தாள். அந்த நிமிடம் முடிவெடுத்தாள் தனக்கும் தன் குழந்தைகளுக்கும் இப்படி ஆதரவு தரும் அண்ணனின் நன்மைக்காக அவள் எதுவும் செய்வாள்.

---

**ம**லேசியாவில் கோலாலம்பூரில் உள்ள 'சுல்தான் ஆலம் ஷா' அருங்காட்சியகத்தில் நடைபெற்ற கண் காட்சி ஒன்றில் இடம் பெற்றிருந்த பல அதிசயப் பொருட்களில் இதுவும் ஒன்று. பாதி முகமும் உடலின் மேல் பாகம் பெண் எலும்புக் கூடாகவும், அரைக்கு கீழ் பாம்பாகவும் காணப் படும் இவள் மச்ச கன்னியைப் போல பாம்புக் கன்னியாம்!

-க.ரவீந்திரன்



ஆனால், மனதில் சின்ன உறுத்தல். மெல்ல அண்ணனிடமே கேட்டுவிட்டாள். "அண்ணே, உனக்கு ரத்த சம்பந்தம் உரிமை, கடமைனு பேசற. அ... அண்ணி... போகப் போக எங்களை பாரமா நினைச்சா?"

"நியாயமான பயம், அன்னம். ஆனா, அவ பெரிய குடும்பத்துல வந்தவ. நியாயமான உதவிகளுக்கு குறுக்க நிக்கமாட்டா. அவ நல்லவ. என் தங்கையும் அதைவிட நல்லவ. ரெண்டு கை தட்டினாத்தான் சப்தம். வீட்ல பொம்பளைங்க ஒத்துமையா இருந்துட்டா, ஆண்களுக்கு பிரச்சினையே இல்லை." அசந்து போய் நின்றாள் அன்னம். என்ன அழகாகப் பேசுகிறார் அண்ணன். இந்தத் திறமைதான் அவரை வியாபாரத்தில் முன்நிறுத்தியிருக்க வேண்டும்!

மனைவியையும் விட்டுக்கொடுக்கவில்லை. தங்கையையும் தழைந்து போகச் சொல்லவில்லை. 'அவளும் நல்லவள், நீயும் நல்லவள்' இரு கைகள் ஓசை எழுப்பாமல் பிரச்சினை வரும்போது-ஒருவர் பேசாமல் விட்டுக்கொடுத்துவிட்டால் ஒற்றுமைதானே! அசந்து போய் நின்றாள் அன்னம். என்ன அழகாகப் பேசுகிறார் அண்ணன். இந்தத் திறமைதான் அவரை வியாபாரத்தில் முன்நிறுத்தியிருக்கவேண்டும்!

அன்று முதல் அன்னம் அந்த வீட்டில் ஒருத்தியாய் மனதார ஒன்றினாள். தன் எல்லை மீறாமல், எல்லாவிதத்திலும் உதவிக் கொண்டு அண்ணனுக்கும் அண்ணிக்கும் ஆதரவாய் இயங்கினாள்.

வீடு நிறைய வேலையாட்கள். சமைக்க, மாடுகளைப் பராமரிக்க, வீட்டைப் பராமரிக்க, கார் ஓட்ட என்று வீட்டிலேயே இருந்த ஆட்கள் தவிர, வயல்களிலும் மில்களிலும் வேலை செய்பவர்களும் அடிக்கடி வேலை நிமித்தம் வந்து போவார்கள். வீடு எப்போதும் 'ஜே ஜே' என்று தான் இருக்கும். ராசப்பன் சொன்னதுபோல், பின்னால் சிமெண்ட் தரை போட்ட நீண்ட ஹாலைக் கட்டிப்போட்டிருந்தார். அங்கே வரிசையாய் ஆட்கள் அமர்ந்து பந்தி பந்தியாய் மதியச் சாப்பாடு நடக்கும்.

எல்லாவற்றையும் பொறுப்பாய் முன்நின்று கவனிக்க ஆரம்பித்தாள் அன்னம்.

"பத்து மூட்டை குறையுதே!"

"அடுத்த லோடுல வருதும்மா!"

"பத்து சின்ன மூட்டைக்காக ஒரு லோடா? இதுல இவ்வளவு இடமிருக்கில்ல. போட்டு வராதது உங்க தப்பு. அடுத்த லோடுக்கான காசுல பாதிதான் தருவேன்."

கறாராய்ப் பேசி காசை மிச்சம் பிடிப்பாள்.

"ராமு, வீடெல்லாம் ஒரே ஒட்டடை பாரு. நாளைக்கு அடிச்சுடு."

"சரசு, தோட்டத்து பாகலை ஏன் எதுவுமே செய்யாம விட்டு வச்சிருக்க? ஒரு பிட்லை செஞ்சுடு. பூஷணிக்காயும் பறிக்கறா மாதிரிதான் இருக்கு. புடலையை பறிக்கச் சொல்லி ஒரு பொரியல் செஞ்சுடு. ரெண்டு நாளைக்கு காய் எதுவும் வாங்க வேண்டாம். தோட்டத்து காயையும் பறிச்சு மார்கெட்லயும் வாங்கி ஏன் அனாவஸ்யமா வேஸ்ட்டு



பண்ணறீங்க?"

"மில் விஷயமா டவுனுக்குப் போறியா, வேலு? அப்படியே நம்ம தென்னந்தோப்புக்கு உரம் போடணும்னு சாமிக்கண்ணு சொன்னாரு. விவரம் கேட்டு வாங்கி வந்துடு. அப்புறம் அதுக்குனு தனியா பெட்ரோல் செலவழிச்சுக்கிட்டு போகவேண்டிவரும்."

தங்கையிடம் இத்தனை நிர்வாகத் திறமையா? ராசப்பனே ஆச்சர்யப்பட்டார். இத்தனை ஆட்களையும் கண்ணில் விரல் விட்டு ஆட்டினாலும், அண்ணி முன் குழைந்து போவாள் அன்னம்.

அண்ணி பர்வதம் இயல்பிலேயே நல்லவள். பெரிய இடத்துப் பெண். அதனால், நாத்தி குழந்தையுடன் வந்து தங்கியதை சொத்தைக் கரைக்கிறாளே என்று சிறுமையாய் பார்க்காமல், பெருந்தன்மையாய் நடந்து கொண்டாள். அன்னம் வேறு இழுத்துப் போட்டு வீட்டுப் பொறுப்பை நிர்வகிக்க, பர்வதத்திற்கு சற்று வேலைப்பளுவும் குறைந்தது என்றுதான் சொல்லவேண்டும். அதுவரை வீடும் தோட்டமும் ஆட்களுமாய் இருந்ததால் ஒரு நாலு நாட்கள் கூட பிறந்த வீட்டிற்கோ கல்யாணம் கார்த்திகை என்றோ போகமுடியாமல் இருந்தாள். அன்னம் வந்த பின் அதெல்லாம் சாத்தியமாயிற்று.

தன் இரு குழந்தைகளோடும் அண்ணன் மகள் அகிலாவையும் அன்னமே பொறுப்பாய் கவனித்துக் கொண்டாள்.

"அண்ணி, என்ன இருந்தாலும் பெண் குழந்தைகளை டிரைவரை நம்பி அனுப்பக்கூடாது. இப்ப சிறுசுங்க. திமுர்னு வளர்ந்து நிக்கும்." என்று காலை குழந்தைகளோடு காரில் போய் பள்ளியில் விட்டுவிட்டு வருவாள்.

மதியம் காரை அண்ணன் மில்லுக்கோ தஞ்சை டவுனுக்கோ எடுத்துப் போய்விடுவார். அதையெல்லாம் பொருட்படுத்தவே மாட்டாள் அன்னம்.

"என்ன ரெண்டு தெரு தானே," என்று கடச்கட மூன்று குழந்தைகளுக்கும் மதிய உணவு கட்டிக்கொண்டு ஓடுவாள்.

"காலையில கட்டிக் கொடுத்துடலாமே. ஏன் இப்படி அல்லாடறீங்க?" என்று பர்வதம் எத்தனை சொன்னாலும் கேட்கமாட்டாள்.

"வீட்ல வேலை செய்யறவங்களையே மதிச்ச மதியம் கடச்கட சாப்பாடு போடறோம். வளர்ற குழந்தைகளுக்கு வாய்க்கு ருசியா, சத்தா போட வேணாமா? காலையில அவசரம். ராத்திரி ரொம்ப சோத்தை வச்சு அடைக்கக்கூடாது. மிதமாச் சாப்பிடணும். அப்ப மதியமாவது நல்லா சாப்பிட வேண்டாமா? ஒரு நடை போயிட்டு வந்தா குறைஞ்சா போயிடுவேன்." என்று வெய்யிலில் ஓடும் நாத்தியைப் பார்க்கப் பாவமாய் இருக்கும் பர்வதத்திற்கு.

தன் கையால் பிசைந்த சாத வகைகளும், பழங்களும், காய் வகைகளுமாய் டப்பா டப்பாவாய் எடுத்துப் போவாள் அன்னம். மரத்தடியில் மூவரையும் உட்கார வைத்து பார்த்துப் பார்த்து பரிமாறுவாள். தன் குழந்தைகளைவிட அகிலாவைச் சற்று கூடுதலாகவே கவனிப்பாள்.

அடுத்த சிமிழ்
அய்க்கண்
எழுதிய
நீ என் மகன் இல்லை... அப்பா!
வித்தியாசமான விறுவிறுப்பான
குடும்ப நாவல்

ஒருமுறை சிறுமி அகிலா பளிச்சென்று கேட்டுவிட்டாள், "ஏன் அத்தை நெய்யும் தயிரும் ,எனக்கு மட்டும் அதிகம் போட நீங்க? குமாருக்கும் லதாவுக்கும் கம்மியா போட நீங்க. லதா இன்னும் கொஞ்சம் கேக்கறா பாருங்க. போடுங்க," என்றாள்.

அருகே அமர்ந்து சாப் பிட்டுக் கொண்டிருந்த ராசப்பன் விலுக்கென்று நிமிர்ந்தார். தங் கையை கோப மாய் விழித்தார்.

"உன் அப்பன் வீட்ல பாலுக்கும் தயிருக்கும் பஞ்சமில்லை. எட்டூரு உட்கார்ந்து சாப்பிட்டாலும் வடிச்சுக் கொட்ட வக்கிருக்குனு உன் அத்தைகிட்ட நல்லா சொல்லு" என்றார் கோபம் மாறாமல்.

அண்ணியும் வந்து, "இங்க பாருங்க, இப்படி பிள்ளைங்க மத்தியில பாரபட்சம் காட்டறதானா, இனிமே நீங்க பசங்களுக்குப் பரிமாறத் தேவை இல்லை," என்றாள்.

"அப்பனில்லாத குழந்தைங்கம்மா. ஏன் இப்படி நீ நடந்துக்கற? ...டேய் பசங்களா, இந்த மாமன் வீட்ல உங்களுக்கு எல்லா உரிமையும் இருக்குடா. கேட்டு வாங்கிச் சாப்பிடுங்க," என்றார் ராசப்பன்.

கண்களில் நீர் கோர்க்க அண்ணனை நன்றி பொங்கப் பார்க்கத்தான் முடிந்தது அன்னத்தால்.

அண்ணனும் அண்ணியும் பாசமாய் இருப்பதில் ரொம்பவே நெகிழ்ந்து தான் போனாள் அன்னம். சிறு வயது அன்பு திருமணமானால் மாறும் இக்காலத்தில், இத்தம்பதிகளின் அன்பு அவளைத் திக்குமுக்காட வைத்தது. மகனில்லாததாலோ என்னவோ அதிலும், ராசப்பனுக்கு குமாரை ரொம்பவே பிடித்தது. அவன் நன்கு படித்து முதல் மாணவனாய் வகுப்பில் நின்றதில் குதூகலித்தார். அவன் செய்யும் சில்லறைச் சேட்டைகளில் "பார் என்னைப் போலவே இருக்கான்" என்பார். இதுபோன்ற தருணங்களில் எல்லாம் அன்னம் உருகுவாள். அன்னத்தின் மனம் ரகசியமாய் குமாரையும் அகிலாவையும் ஜோடியாய் நிறுத்தி சந்தோஷிக்கும்.

உடனேயே அந்த எண்ணத்தை மனதிலிருந்து அழிக்கவும் முயல்வாள். அண்ணன் இத்தனை செய்வதே பெரிது. இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடிப்பார்களா? அதிகம் ஆசைப்பட்டு விட்டு நிராசையானால் கஷ்டமல்லவா. அவள் பயத்திற்கு ஏற்ப, பர்வதத்தின் அண்ணன் வருகை இருந்தது.

பர்வதம் போலவே இவனிடம் பாசமாய்ப் பழகினார். இவன் பிள்ளைகளைக் கொஞ்சினார். ஆனால், சாப்பாட்டு நேரத்தில் அகிலாவைப் பார்த்து, "மருமகளே, மாமன் பக்கத்துல வந்து உட்காரு." என்று இழுத்து உட்கார வைத்துக் கொண்டவர், "நானெல்லாம் என்ன உங்கப்பனளவு பணக்காரனா? என்னை எல்லாம் சம்பந்தியா ஏற்பாரா அவரு? என்ன மச்சான்? என்று வம்புக்கிழுத்தார்.

"பாத்தியா புள்ள, உங்கண்ணன் என்னை வம்புக்கு இழுக்கறதை? உங்க பணத்தைப் போட்டுத்தான் நான் முன்னுக்கு வந்ததே. இவரென்னடான்னா."

"பழசையெல்லாம் யாரு மச்சான் நினைக்கறாங்க? ஏதோ நீங்க மறக்காம இருக்கீங்க. இப்படியே இருந்தாச் சரி. என் மகன் எதிர்காலம் பத்தி கவலைப்படாம இருப்பேன்."

இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு, சுத்தமாய் தன் மனதில் அகிலாவை மருமகளாக்கிக் கொள்ளும் எண்ணத்தைத் துடைத்தெறிந் தாள் அன்னம்.

கடவுள் போட்ட கணக்கு எப்போதுமே வேறாக இருப்பதை மனிதன் புரிந்துகொள்ளமுடியாததால் தானே வாழ்க்கை இத்தகை சுவாரஸ்யமாய் இருக்கிறது!

## 8

குமார் ரொம்ப நன்றாகப் படித்தான். பிறந்து வளர்ந்த சொந்த ஊரைவிட்டு மாமன் ஊருக்கு வந்த புதிதில் கண்ணைக் கட்டி காட்டில்விட்டது போல் இருந்தது. ஒருபுறம் தகப்பனை இழந்த சோகம், மறுபுறம் புதுமனிதர்கள் புதுசூழல்... முதலில் சற்றுத் தடுமாறித்தான் போனான். அதுவும் அம்மா கூனிக்குறுகி ஒடுங்க, இவனும் இவன் தங்கை லதாவும் அதிகம் துவண்டார்கள்.

வாடும் செடியை சமயத்தில் நீர் ஊற்றிக் காப்பாற்றுவது போல், மாமன் அன்பைப் பொழிய மூவரும் மலர்ந்தார்கள். வீட்டினர் அன்போடு கூடுதலாய் புதுப்பள்ளியில் தோழனாய் அமைந்த ராஜசேகரின் நட்பு ரொம்பவே இதமாய் அமைந்தது குமாருக்கு. ஏதோ ரொம்ப நாள் பழகியவன் போல் ஒட்டிக் கொண்டான் ராஜசேகர். புதுப்பள்ளியின் விதிமுறைகள், சூழல்கள், ஆசிரியர்களின் குணங்கள் பள்ளியின் மூலை

முடுக்குகள் என்று எல்லாவற்றையும் தெளிவுபடுத்தினான்.

புரிந்து கொள்ளும் நட்பிருந்தால் போதும். எந்த கொடிய சூழலும் இனிமையாக அமையும். ராஜசேகர் என்ற இனிய நண்பனின் துணையால் புதுப்பள்ளியின் சூழலே சொர்க்கமானது. ராஜசேகரும் நன்றாகவே படிப்பான். படிப்பில் போட்டியும் நட்பில் ஆழமும் தானுக்கு நாள் அதிகரித்தது.

பள்ளிப்படிப்பு. நல்ல நட்பு. அன்பான உறவுச்சூழல் என்று நிம்மதியாய் வாழ்க்கை அமைந்தது. வீட்டிலும் பள்ளியிலும் எப்போதும் உடன் இருக்க அகிலா. அவனுக்கு இன்னொரு லதாவாய் தெரிந்தாள். மற்றபடி, மெல்ல பருவம் விழித்தபோது, கூட அவன் மீது தனிக்கவனம் திரும்பவில்லை. அதே விளையாடு வேடிக்கை... அவ்வளவுதான். அம்மாவின் ரகசிய ஆசையும் வெளிப்படையாய்த் தெரியாததால் அகிலா மீது எந்தவித ஈடுபாடும் ஏற்படவில்லை.

ஆனால்... சீக்கிரமே அவனை வேறொரு பெண் பாதித்தாள்.

அவள்... அவள் தான் பிருந்தா.

பள்ளி இறுதியில் அவன் மாநிலத்திலேயே மூன்றாவதாய் வந்தான். தோளுக்கு மிஞ்சி வளர்ந்த பிள்ளை என்பதையும் மறந்து ராசப்பன் அவனைத் தூக்கிச் சுற்றினார்.



"ப்ளஸ் -டுல நீ கேக்கற குரூப் கிடைக்கும். எது வேணும்னாலும் சேர்ந்துக்க. படிக்க வைக்கறேன்."

ரொம்ப தயங்கிய குமார் மெல்ல, "நான்... நான்..."

"சொல்லுப்பா. என்ன படிக்கற?"

"எது வேணும்னாலும்... ப... படிக்கட்டா?"

"அட, என்னப்பா தயக்கம்? இத்தனை நல்ல மார்க் வாங்கி இருக்க. அப்புறம் என்ன?"

"ப்ளஸ் டூல ப்யூர் சயின்ஸ் சேரணும்னு பார்க்கறேன்... மெ... மெடிக்கல் சேரணும்னு... ஆசை மாமா." தட்டுத்தடுமாறி சொல்லி விட்டான்.

அவர் அப்படியே அவனை வாரி அணைத்துக் கொண்டார்.

"படிடா. நீ என்ன வேணும்னாலும் படி. என் மருமகன் டாக்டர்னா எனக்கில்ல பெருமை." மீசையை முறுக்கிக் கொண்டார்.

சொன்னபடி அவன் ப்ளஸ்டு முடித்தவுடன், "மெடிக்கல்ல சேர என்ட்ரன்ஸ் எழுதுடா குமாரு. இந்தா என்ட்ரன்ஸ் டெஸ்ட் எழுத புஸ்தகம். எனக்குத் தெரிஞ்சதை டவுன்ல வாங்கினேன். மேலும் வேணும்னா உன் பிரெண்டு ராசாவோட போய் வாங்கிக்க. தஞ்சாவூர், திருச்சி, எங்க கிடைக்குமோ அங்க போய் வாங்கு." தலையணை தலையணையாய் புத்தகங்களையும் கத்தை நோட்டுக்களையும் நீட்டும் மாமாவை வியப்புடனும் மதிப்புடனும் பார்த்தான்.

படிக்க லட்சக் கணக்கில் செலவாகுமோ என்ற பயம் சின்னதாய் இருந்தது. ஆனால், அந்த பயத்திற்கெல்லாம் அவசியமே இல்லாமல் அவனுக்கு மெரிட்டில் இடம் கிடைத்தது. அவனைப் போலவே ராஜசேகருக்கும் மெடிக்கலில் சேர. இருவரும் தினமும் இட்டை கிராமத்திலிருந்து தஞ்சை போய் வருவது சற்று சிரமம் என்று ஹாஸ்டலில் சேர்ந்தார்கள்.

அன்னம் சந்தோஷமும் வருத்தமுமாய் அல்லாடினாள். மகன் மருத்துவம் படிப்பதிலும் அண்ணன் படிக்க வைப்பதிலும் சந்தோஷம். அதுவரை பிரியாத மகன் முதல் முறையாய் தன்னைப் பிரிந்து ஹாஸ்டல் சென்று தங்கிப் படிக்க இருப்பதில் வருத்தம்.

"என்னம்மா இது? அவனவன் கடல்தாண்டி அமெரிக்காவுக்கெல்லாம் போறான். நான் கேவலம் தஞ்சாவூர் போய்த் தங்கப்போறேன். ரெண்டு மூணு கிலோ மீட்டர். ஒரு ஃபோன் செஞ்சா ஒரு மணி நேரத்துல உன் முன்னாடி நிக்கமாட்டேனா?"

மாமா வந்து அவன் முதுகு தட்டிக்கொடுத்தார்.

"அவனை நான் கவனிச்சுக்கறேன், குமாரு நீ கவலைப்படாதே. தினமும் போக வர இந்த டிராபிக்ல ரெண்டு மணி நேரம் வேண்டாக வேண்டாம்னு தான் ஹாஸ்டல்ல பணம் போனாலும் போகட்டும்னு சேர்த்தேன்... என்ன அன்னம் மகனுக்கு தெம்பு சொல்லி நீ அனுப்பறதை விட்டுட்டு..."

"தப்பு தான், அண்ணே. குமாரு, என்னைப் பத்திக் கவலைப்படாதே நீ போய் நல்லாப் படிச்சுட்டு வாடாம்மா."

அதுவரை அவன் வாழ்வில் காக்கும் தேவதையாய் இருந்தது அவன் அம்மா மட்டும்தான். வெளி உலகில் கால் வைத்தவுடன் அவன் அசந்து போனான்- அந்த தேவதையைப் பார்த்து.

பிருந்தா!

பீகார் மாநிலம் பாட்னாவில் பொம்மைகளை உருவாக்கும் ஒரு கைவினைஞரின் கைவண்ணத்தில் 'துர்கை' உருவாகிறது.

-க. ரவீந்திரன்

இவர்கள் வகுப்பு.

இதுவரை குமார் படித்ததும் இருபாலார் படிக்கும் பள்ளியில் தான். வீட்டிலும் தங்கை தவிர முறை உறவில் அகிலா வளைய வருகிறாள். பண்ணையில் எத்தனையோ பெண்கள்... ஆனால், யாருமே ஏற்படுத்தாத தாக்கத்தை பார்த்தவுடன் ஏற்படுத்தினாள் பிருந்தா.

இயல்பாய் பழகினாள். இவர்களுக்கு இணையாய்ப் படித்தாள். எல்லோருக்கும் உதவினாள். அவளுடன் பழகப் பழக மேலும் அவன் மனதில் அவள் ஆழமாய்ப் பதிந்தாள்.

ராஜசேகர் தான் அரண்டு போனான்.

"டேய், உன் மாமா என்ன சொல்வார்?"

"ஏன்டா? இதுவரை என் இஷ்டம் போல படிக்கக்கூட வெக்கறவர், என் கல்யாணத்துக்கா குறுக்க நிக்கப் போறார்?"

"அ... அதில்லடா. வீட்ல அகிலா?"

"சேச்சே. நான் அந்த நெனப்போட அவகிட்டப் பழகவே இல்லை."

"வீட்ல?"

"வீட்லயும் அப்படி ஒரு எண்ணம் இருக்கறா மாதிரி தெரியலை. அகிலாவோட மாமா தன் மகனுக்கு அகிலாவைக் கட்டிக்கணும்னு துடியா நிக்கறாரு. அத்தைக்குமே அது விருப்பம்னு தான் தோணுது. அதனால, அகிலா ஒரு பிரச்சனையே இல்லடா."

அவன் நினைப்பெல்லாம் சரிதான். ஆனால், விதி என்ற ஒன்று உண்டல்லவா?

நான்கு வருடங்கள் காதலர்களாய் பிருந்தாவும் குமாரும் மனமும் உணர்வும் ஒன்றித் திரிந்தார்கள். இரு நல்ல இதயங்கள் இணைவதில் ராஜசேகரும் சந்தோஷப்பட்டான்.

மூவரும் ஒன்றாய் வகுப்பில் பாடம் கவனித்தார்கள், படித்தார்கள், டிஸ்கஸ் செய்தார்கள். போட்டிபோட்டு பரீட்சை எழுதினார்கள். மாலை நேரங்களில் பெரிய கோயில் போய் சுற்றுவார்கள். பிரம்மாண்ட கோபுரமும் பெருமானும் பிரமிக்க வைத்தார்கள். சினிமா, சரஸ்வதி மகால் என்றும் சுற்றினார்கள். சமயங்களில் ராஜசேகருடன் பிருந்தாவையும் வீட்டிற்கு அழைத்துப் போயிருக்கிறான் குமார். இன்னும் சில நண்பர்களும் அவ்வப்போது வந்து போவதால், பிருந்தாவின் வருகை ஒன்றும் பெரிதாய் வீட்டினரை வித்யாசமாய் பாதிக்கவில்லை.

அண்ணன் மகளோ தன் மகனுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. அதனால், மகனுக்குப் பிடித்திருந்தால், இந்தப் பெண்ணையே மணக்கட்டுமே என்றுதான் அந்தத் தாயுள்ளமும் நினைத்தது.

கடைசி வருடம் முடித்து ஹவுஸ் சர்ஜன் முடியும் சமயம். திருவிழா என்று ஊருக்கு வந்து நான்கு நாட்கள் தங்கினார்கள் குமாரும் ராஜசேகரும். திரும்பும் நாள் ராஜசேகர் டைபாய்டில் படுத்துவிட்டான். குமார் மட்டும் தஞ்சை கிளம்பினான். "கிளம்புடா! பிருந்தாவப் பார்க்காம தூக்கம் வராதே!" ராஜசேகர் கிண்டல் செய்யத் தவறவில்லை.



கல்லூரி வந்து சேர்ந்த போதுதான் பிருந்தாவும் கல்லூரிக்கு வரவில்லை என்று தெரிந்தது. ராஜசேகரைக் கூடச் சரியாக கவனிக்காமல் பிருந்தாவுக்காக அவசரமாய் வந்தால், அவளும் வரவில்லை. அன்று முழுதும் பாடத்தில் புத்தி செல்லவில்லை.

மாலை வந்தவுடன் அவசரமாய் பிருந்தாவின் வீட்டிற்கு ஓடினான்.

பிருந்தா நல்ல வசதியான வீட்டுப் பெண். நாலு வருடங்களுக்கு முன் நடந்த கார் விபத்தில் பெற்றோர் இருவரையும் பறிகொடுத்துவிட்டாள். வயதான பாட்டிதான் இப்போது துணை. நல்ல வசதியும் மதிப்பெண்களும் இருந்ததால், மருத்துவக் கல்லூரியில் சேர்ந்துவிட்டாள். பெற்றோரை இழந்து அன்புக்கு ஏங்கிய மனம் எல்லோரிடமும் தோழமை பாராட்டியது. அதிலும் அறிவும் பண்பும் அன்புமாய் இருந்த குமார் அதிகம் கவர இயல்பாய் அவன் பக்கம் மனம் சாய்ந்துவிட்டது.

குமாருக்கும் கண்டதும் காதல் என்று ஈர்ப்பு ஏற்பட்டாலும் அப்பாவை இழந்து மாமா தயவில் தான் இருப்பது போல்தானே இவளும் என்ற இரக்கமும் சேர்ந்து கொண்டு அன்பை ஆழமாக்கியது. ஐந்து வருடங்கள் அன்பு இறுகி இறுகி...

இருவர் மனதிலும் தாங்கள் காதலர்கள் என்ற எண்ணம் மாறி கணவன் மனைவி என்றே எண்ணம் ஏற்பட்டுவிட்டது. திருமணத்திற்குப் பின் மேலே என்ன படிப்பது, எப்படி மருத்துவமனை அமைப்பது என்றெல்லாம் நிறையத் திட்டம் போட்டு வைத்திருந்தார்கள்.

இன்னும் சில மாசங்கள் தான். படிப்பு முடிந்தவுடன் மாமாவிடம் சொல்லிவிட வேண்டும். வீட்டினர் சம்மதித்து விட்டால் போதும். அகிலாவிற்கும் லதாவிற்கும் மணமாகும் வரைகூட இவர்கள் காத்திருக்கவும் தயார். அதற்குள், மேல் படிப்பையும் முடித்துவிடலாம்.

அகிலாவும் லதாவும் இப்போது கடைசி வருடம் பி.எஸ்.ஸி படித்துக் கொண்டிருக்கிறார்கள். அகிலாவிற்கு அவள் மாமன் மகனோடு திருமணம் என்று அச்சாரம் போட்டுவிட்டார்கள். பரிட்சை முடிந்தவுடன் திருமணம். லதாவிற்கும் தீவிரமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறார் மாமா...

மனம் முழுதும் ஆயிரம் கற்பனைகளோடு அவள் வீட்டில் போய் கதவு தட்டினான். பிருந்தா தான் திறந்தாள். இவனைப் பார்த்தவுடன் முகம் பூவாய் மலர்ந்தது.

"ஹாய்... என்ன சர்ப்ரைஸ்! வாங்க, வாங்க! எப்ப ஊர்லயிருந்து வந்தீங்க?"

"இன்னைக்கு வரேன்னு தெரியாதா? நீ ஏன் வரலை?"

"ராஜாவுக்கு ஏதோ ஜுரம்னு கேள்விப்பட்டேனே..."

"டைபாய்ட். யார் உனக்கு சொன்னா?"

"திருவையாறுல என் பாட்டியோட சொந்தக்காரர் வீட்ல ஒரு சாவு. நானும் பாட்டியும் போனோம். பாட்டி நாளைக் காலை வருவாங்க. நான் மதியம் திரும்பினேன். பஸ் ஸ்டாண்டில் நரேனைப் பார்த்து



**ஆ**ஸ்திரேலியாவில் மெல்பர்ன் நகரில் FITZROY பூங்காவில் ஐந்து மீட்டர் நீளத்தில் புற்களால் உரு வாக்கப்பட்ட நிர்வாணச் சிலையைக் காணலாம். புல்லை தினசரி ஒழுங்கு படுத்த வேண்டும். எனினும் சில வாரங்கள் மட்டுமே பார்வையாளர் களைக் கவரும் இந்த அழகி, பிறகு காய்ந்து குப்பையாகிவிடுகிறார். 'அழகு நிரந்தரமல்ல' என்பதை இந்த சிலை சொல்கிறதோ?

-க.ரவீந்திரன்

---

ளைப் பத்தி விசாரிச்சேன். ராஜா வரலைனு காரணமும் சொன்னான். போதுமா?"

"போதும்மா. போதும், நீ வரலைனவுடனே பயந்துட்டேன். உனக்கும் உடம்புக்கு ஏதோனு..."

"வந்தா என்ன? என்னை கவனிக்கத்தான் கோல்ட் மெடலிஸ்ட் டாக்டர் குமார் இருக்காரே. அப்புறம் என்ன?"

"கோல்ட் மெடலிஸ்ட் டாக்டர் குமார் வேற விதத்துல டாக்டர் பிருந் தாவை கவனிப்பார். அதுக்குனு உடம்புக்கு வரவேண்டாம்."

புரியாததுபோல் "வேற விதத்துலன்னா?"

சட்டென்று அவளை இழுத்து அணைத்து முகத்தில் ஒரு முத்தத்தைப் பதித்தவன், "இப்படி ஆரம்பமாகும் என் கவனிப்பு." என்றான். "தொடருட்டுமா?" அவள் கண்மூடி முழுதாய் தன்னை அர்ப்பணித்தாள்.



இளமை, தனிமை, இரவு, அதீத காதல், நாளைய கணவன்-மனைவிதானே என்ற துணிவு ஒருவர் மேல் ஒருவர் கொண்ட நம்பிக்கை எல்லாமாய்ச் சேர்ந்து அவன் மெல்ல எல்லை மீறினான்.

9

**இ**ரவு மனமே இல்லாமல்தான் ஹாஸ்டல் திரும்பினான். அதுவரை மனதால் மட்டுமே ஆக்கிரமித்திருந்தவள். இன்று... ஒரு புறம் இனிமையும் வெட்கமும் எழுந்தது என்றால் மறுபுறம் தாலிகட்டாமல் தவறு செய்து விட்டோமோ என்று உறுத்தலும் எழுந்தது.

பிருந்தா இவ்வளவு கூட கவலைப்படவில்லை.

"முதலிரவில் இப்படித்தான் குற்ற உணர்வோட இருப்பீங்களா குமார்?"

"அது வேற பிருந்தா. அங்கே ஊர் அறிய தாலி கட்டி நீ என்னுடையவளா ஆகியிருப்ப."

"இப்பவும் நான் உங்களுடையவதான். என்னைப் பொறுத்தவரை எனக்கு எந்த குற்ற உணர்வும் இல்லை. தன் கணவன்கிட்ட மனைவி தன்னை இழந்தா தவறா?"

அவன் பிரமிப்போடு அவளைப் பார்த்தான்.

"என் மேல இவ்வளவு நம்பிக்கையா? இருந்தாலும் பிருந்தா... இது சரியில்லை. கல்யாணத்துக்கு முன்ன உன்கூட உரிமையா பழகிட்டு, எனக்கே ஏதாவது ஆச்சன்னா."

அவள் சட்டென்று அவன் வாயைப் பொத்தினாள். அவன் அவள் கைவிலக்கிவிட்டு, "நாம டாக்டர்கள். தெருப்புன்னா வாய் வெந்துடாது. நான் செஞ்சது தப்புதான்."

"அப்படி எதாவது ஆச்சுன்னா... சந்தோஷமா உங்க விதவையா வாழ்வேன்! போதுமா? ஒண்ணு சொல்லட்டா? உங்களோட இந்தப் பிறந்த நாளைக்கு என்னை நானே பரிசாத் தர்ரதா இருந்தேன்! ஒரு காதலனுக்கு காதலி தரும் மிகப்பெரிய பரிசு... என் கணவனுக்கு நான் தரப்போறது."

அவன் அவளை ஆச்சர்யமாய்ப் பார்த்தான். இப்படி ஒரு பெண்ணா? தன் மேல் எத்தனை நம்பிக்கை இருந்தால் இப்படிப் பேசுவாள்! இந்தப் பெண்ணைக் கண் கலங்காமல் ஆயுசுக்கும் காப்பாற்றவேண்டும். அப்படியே அவளை அணைத்துக் கொண்டான்.

"போகணுமேனு இருக்கு பிருந்தா. இப்படியே ஒரு தாலி கட்டிட்டு உன்னோடவே இருந்துடவா?"

"எனக்கு ஆட்சேபணை இல்லை, என் கண்ணா. ஆனா, உங்க வீட்ல ஹாஸ்டல்லனு தேடுவாங்க. இன்னும் ஒரே பாசம் நமக்கும் கோர்ஸ் முடிஞ்சுடும். அகிலா கல்யாணமும் முடிஞ்சுடும். நல்ல நேரம் பார்த்து வீட்ல சொல்லுங்க. லதா கல்யாணம் எந்த வரைல இருக்கு?"

"பேங்க் ஆபீசர் வரன் தகையும் போல இருக்கு."

"நல்ல விஷயம். அதுவும் சீக்கிரம் நடந்துடட்டும். இன்னைக்கு நடந்த விஷயத்தை நினைச்சு மனசை வருத்திக்காதீங்க. உங்க மனைவி நான். போதுமா?"

அவன் நெகிழ்ந்து தான் ரூம் திரும்பினான். அறைக்கு வந்தவுடன் வார்டன் அழைத்தார்.

"என்னப்பா இவ்வளவு லேட் பண்ணிட்ட. உங்க ஊர்லயிருந்து அவசரம்னு மூணு தடவை ஃபோன் செஞ்சுட்டாங்க."

அவன் பதறிப் போனான். ராஜாவுக்குத்தான் ஏதாவது? அவசரமாய் பர்மிஷன் வாங்கி போன் போட்டான். பதட்டத்தை மறைத்துக் கொண்டு பேசினான்.

"என்ன மாமா? ஃபோன் செஞ்சீங்களா?"

"உடனே கிளம்பி வா குமார். எனக்கு பயமா இருக்கு."

"எ... என்னாச்சு?"

"அகிலா... அகிலாவுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லை. நீ உடனே வா."

அவன் வார்டனிடம் சொல்லிவிட்டுப் பதட்டத்தோடு ஓடினான்.

"என்னாச்சு?" மாடி ஏறியபடி கேட்டான்.

அவன் திருவிழா என்று ஊர் வந்திருந்த சமயம், அகிலாவும் லதாவும் கல்லூரி எஸ்கர்ஷனுக்குப் போயிருந்தார்கள். இவன் தஞ்சை கிளம்பிய அன்று மாலை அவர்கள் திரும்பவேண்டிய நாள். திட்டப்படி வந்திருக்கிறார்கள். ஆனால், அகிலா...

"போன இடத்துல ஒரு லாரி இவங்க பஸ் மேல மோதியிருக்கு."

"ஐயயோ... அகிலா, லதாவுக்கு... ஒண்ணுமில்லையே"

"இல்ல, சின்ன காயத்தோட தப்பிச்சுட்டாங்க. ஆனா..."

அவர்கள் அறைக்குள் நுழைய இருந்தவனை, "ஒரு நிமிஷம்," என்று நிறுத்தினார், மாமா.

"என்ன மாமா?"

"அகிலாவோட தோழி ஒருத்தி ஸ்பாட்லயே கூழாயி போய்ச் சேர்ந்துட்டா-அந்த விபத்துல..."

"மை காட்!"

"அதப் பார்த்ததுல அகிலா "வினிதா"னு கத்தினவதானாம். அப்புறம் பிரமை பிடிச்சாப்ல இருக்கா. வெரிச்ச பார்வை. எது கேட்டாலும் பதில் இல்லை."

அவரைத் தட்டிக் கொடுத்தவன், "நான் பார்க்கறேன் மாமா," என்று உள்ளே போனான்.

அறைக்குள் கட்டிலில் விழி விரிய அகிலா அமர்ந்திருக்க, அத்தை, அம்மா, லதா அத்தையின் அண்ணி என்று சுற்றிலும் வீட்டுப் பெண்களும், சில கிராம முதிய பெண்களும் அமர்ந்திருந்தார்கள்.

"முனி அடிச்சிருக்கும்."



"குலதெய்வத்துக்குப் படையல் போடுங்க. தெய்வ குத்தமா இருக்கலாம்."

ஆளாளுக்கு சலசலத்தார்கள். இவர்களைப் பார்த்தவுடன் மற்ற பெண்கள் அவசரமாய் எழுந்து மரியாதையாய் விலகினார்கள்.

குமார் அங்கே டாக்டராய் மாறிப்போனான். பல்ஸ் பார்த்தான். கண்களைப் பரிசோதித்தான். விவரம் கேட்டான்.

"எதுவும் சரியா சாப்பிடமாட்டேங்கறா. தூக்கமும் சரியா இல்லை." அம்மாவும் அத்தையும் மாற்றிச் மாற்றி சொன்னார்கள்.

சலசலவென்று பேசும் அகிலா ஊமையாய் அமர்ந்திருப்பது அவனுக்கு வலித்தது.

"மாமா, பீப் மென்டல் ஷாக்தான் காரணம். பயப்பட ஒண்ணுமில்லை. எங்க காலேஜ் சைக்யாட்ரி விங்கோட எச்.ஓ.டி. இந்தத் துறையில பெரிய ஆள். நாளைக்காலை முதல் வேலையா அகிலாவை அவர்கிட்ட கூட்டிப்போயிடலாம்."

## 10

ஒரு மாதம் ஓடியதே தெரியவில்லை. பெரிய டாக்டர் மேற்பார்வையில் குமார் அகிலாவை கவனிக்க, மெல்ல அவள் இயல்பு நிலைக்குத் திரும்பத் துவங்கினாள். மனப்பயிற்சிகள்... மாத்திரைகள்... ஆழ்நிலை தியானம்... என்று ஒரு மாதம் அகிலாவிற்கு தீவிர சிகிச்சை நல்ல பலனைத் தந்தது.

"இன்னும் ரெண்டு சிட்டிங் போதும், குமார். ஷி ஈஸ் பர்பெக்ட்லி நார்மல் நௌ... அகிலா, நீ உன் கடைசி வருஷப் பரிட்சையைக் கூட எழுதலாம். நோ ப்ராப்ளம்...

அவர் சுலபமாய் 'நோ ப்ராப்ளம்' என்று சொல்லிவிட்டார். ஆனால், வீட்டில்...

அகிலாவின் அம்மா பர்வதம் கிலோ கணக்கில் இனிப்பை வாங்கிக் கொண்டு தன் அண்ணன் வீட்டிற்கு ஓடினாள். கூடவே அன்னமும் போனாள்.

"அண்ணே, அண்ணே! எத்தனை சந்தோஷமா இருக்கு! நம்ம அகிலா குணமாயிட்டா அண்ணே!"

"அப்படியா?"

அவர் சுரத்தின்றி கேட்டதே அவர்களுக்கு ஒரு மாதிரி இருந்தது.

"ஆமாண்ணே. அகிலா பரிட்சை கூட எழுதலாம்னு சொல்லிட்டார் டாக்டர்."

"அப்படியா?"

அன்னமும் பர்வதமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். மெல்ல பர்வதம் கனைத்துக் கொண்டாள்.

நீ.

"அண்ணே, இந்த நல்ல விஷயத்தை உங்ககிட்ட சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன். அப்படியே..."

"ம்."

"அ... அப்படியே பேசியபடி கல்யாணப் பத்திரிகையை... நல்ல நாள் பார்த்து அடிச்சுடலாம்னு... கேட்டுட்டுப் போலாம்னு வந்தேன். அகிலாவுக்கு இப்படியானவுடனே அண்ணி ரொம்ப ஆடிப்போயிட்டாங்க. 'ஐயோ கல்யாண நேரத்துல இப்படி ஆயிடுச்சே'னு புலம்பினாங்க..."

அண்ணன் தாடை தடவினார். மெல்ல, "நானே சொல்லணும்னு இருந்தேன்."

பர்வதம் சற்று டென்ஷனானாள்.

"என்னண்ணே?"

"என்னம்மா சொல்லட்டும்? எனக்கு என் தங்கை அவ மகள் முக்கியம். ஆனா, அது என் மவனுக்குப் புரியலையே..."

"ஏன்ணே?"

"அவன் வேற யாரோ ஒரு பொண்ணை காதலிக்கறானாம்!" வீட்ல ஒரே ரகளை. அவனை அடிச்சு உதைச்சு... ம், எதுக்கும் மசியலை பயல். கட்டாயப்படுத்தி கட்டிவச்சா நம்ம அகிலா வாழ்க்கை இல்ல பாழாகும்!"

பர்வதம் துவண்டு போனாள். மேலே எதுவும் பேச முடியாமல் திண்டாடினாள். அவளுக்கு ஒரு நொடி உலகமே ஸ்தம்பித்தது. என்ன சொல்கிறார் இவர்? தெளிவாய் பேசும் இவரிடம் மேலே என்ன பேசமுடியும்? பேருக்குச் சாப்பிட்டு விட்டுக் கிளம்பிவிட்டாள்.

கார் தெருக்கோடியில் மக்கர் செய்ய, டிரைவர் பானட் திறந்து பார்த்தான்.

"சின்னப் பிரச்சனைதம்மா. ரெண்டு நிமிஷத்துல சரியாயிடும்."

பர்வதமும் அன்னமும் காரைவிட்டு இறங்கி மர நிழலில் நின்றார்கள். அண்ணன் மகன் ரவி பைக்கில் வந்தான். இவர்களைப் பார்த்தவுடன் வண்டியை நிறுத்தி, "அட! அத்தை, வாங்க... வாங்கம்மா... நம்ம வீட்டுக்குத்தானே?"

"ஆமாப்பா. கிளம்பிட்டோம்."

"வந்து நேரமாச்சா? அகிலா இப்பப் பரவாயில்லையா?"

"பூரண குணமாயிட்டா."

அவன் முகம் மலர, "அப்பா! ரொம்ப சந்தோஷம்." என்றான்.

அன்னமும் பர்வதமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கார் பானெட்டை மூடினான் டிரைவர். "ரெடிம்மா" என்றான்.

"என்ன ரவி, யாரையோ நீ விரும்பறதா ஒரு சேதி காதுல விழுந்தது." அன்னம் மெல்ல கிண்டினாள், நகராமல்.

"அட, யாரும்மா உங்களுக்கு அப்படி ஒரு பொய்த் தகவல் சொன்னது? அகிலோட நிச்சயமான பிறகு வேற பொண்ணை திரும்பிப் பார்க்க நான் என்ன முட்டாளா?"





புத்தாபெஸ்டில் (ஹங்கேரி தலை நகர்) ஏழாவது ஆண்டு எலக்ட்ரானிக் இசை அணிவகுப்பு நடந்தது. அப்போது ஹங்கேரிய கலைஞரின் நடனம் பார்வையாளர்களைப் பரவசப் படுத்தியது.

-க.ரவீந்திரன்

அவ்வளவுதான்! வெடித்தாள் பர்வதம், "அதை உங்கப்பாகிட்ட போய்க் கேளு."

"அத்தை?"

"வாங்க," என்று அன்னத்தை இழுத்துக் கொண்டு கார் ஏறிக் கிளம்பினாள் பர்வதம். வீடு திரும்பியவள் இரண்டு நாட்கள் ஜுரத்தில் படுத்துவிட்டாள். "சொந்த அண்ணனே மறுத்தா, என் மகளை யாரு கட்டுவாங்க?" -பிதற்றினாள்.

ராசப்பன் விஷயமறிந்து தொலைபேசியில் அவள் அண்ணனைத் தொடர்பு கொண்டார்.

"என்ன மச்சான் இப்படி செஞ்சுட்டீங்க?"

"உங்களுக்கு உங்க மக முக்கியம். எனக்கு என் மகன் முக்கியமில்லையா? கொஞ்சம் யோசிங்க. கல்யாணத்துக்குப் பிறகு இவ இப்படி அடிக்கடி பிரமை பிடிச்சு உட்கார்ந்தா, டாக்டருக்கு செலவழிக்கவே சரியாப் போயிடுமில்ல. என் மகன் வாழ்க்கை என்னாவறது?"

பளிச்சென்று கன்னத்தில் அடிபட்டது போல் வலித்தது.

"இது திரும்பத் திரும்ப வர்ர வியாதி இல்லங்க."

"யாரு கண்டாங்க?"

"என் மருமவனே டாக்டர்தானே சொன்னானே."

"அப்ப, அவனையே கட்டிக்கச் சொல்லுங்க."

கேள்விப்பட்டவுடன் அன்னம் சீறினாள்.

"என்ன நினைச்சார் உங்க மச்சான்? அவர் மாதிரி நான் கோழை இல்ல அண்ணே. என் மகன் உன் மக கழுத்துல தாலி கட்டுவான். உங்க அந்தஸ்துக்கு நான் சமமில்லயேனு வாய் மூடி இருந்தேன். அவ்வளவுதான்."

பர்வதம் நாத்தியைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

"அண்ணி, இது அழுவற நேரமில்ல. மக கல்யாணத்த வச்சுட்டு அழுவீங்களா? சீக்கிரமா எழுந்துவாங்க -உடல் நலம் தேறி. கல்யாண வேலைகளை கவனிக்க வேண்டாம்?

தஞ்சை பெரிய கோயில்... எதைப்பற்றியும் கவலைப்படாமல், 'ஆயிரமாண்டுகளாய் இதுபோல் எத்தனை பிரச்சினைகளை பார்த்திருப்பேன்' என்று கம்பீரமாய் நின்று கொண்டிருந்தது.

குமார் நந்திதேவர் அருகே மேடையில் அமர்ந்து தலையைக் கைகளால் தாங்கிக் கொண்டிருந்தான். கவலையாய் அருகே ராஜசேகர்.

"என்னடா முடிவெடுத்திருக்க?"

"என்னடா இப்படி கேக்கறே? பிருந்தாவை நான் எப்படி கைவிடமுடியும்? யு நோ... ரெண்டு மூணு சந்தர்ப்பத்துல நாங்க... உடலாலும் நெருங்கிட்டோம்."

ராஜசேகர் அப்படியே உட்கார்ந்து விட்டான். நண்பன் மாட்டியுள்ள சந்தர்ப்ப வலையின் தீவிரம் அவனுக்குப் புரிந்தது.

"உங்கம்மாகிட் சொன்னியா? அவங்க என்ன சொல்றாங்க."

குமாரின் கண்கள் பனித்துவிட்டன.

"அபலையா ரெண்டு குழந்தைகளோட அண்ணன் வீட்டுல படி ஏறி நின்னவங்கடா. பிள்ளைய டாக்டருக்குப் படிக்க வச்சு பொண்ணுக்கு நல்ல இடத்துல சம்பந்தம் பேசறாரு. அப்படிப்பட்டவருக்கு நாங்க செய்யவேண்டிய செஞ்சோற்றுக்கடன்... என் உடம்பை செருப்பாத் தச்சுப் போட்டாலும் தீராது. ஆனா... பிருந்தா... அவ இப்ப ரெண்டு மாசம்..." ராஜசேகர் அதிர்ந்தார்.

"பிருந்தாவோட நிலைமையை உன் அம்மாகிட்ட சொன்னியா?"

"சொன்னேன்."

"என்ன சொல்றாங்க?"

"அத்தையோட அண்ணன், தன் மகன் வேற பொண்ணை காதலிக்கறதா பொய் சொல்லி இந்த சம்பந்தத்துலயிருந்து கழண்டுகிட்டிருக்காரு. அப்புறம் அவருக்கும் நமக்கும் என்ன வித்யாசம்னு கேட்கறாங்க. கர்ணன் சொந்தத் தம்பிகளை எதிர்க்கப் போறோம்னு தெரிஞ்சும் துரியோதனனை விட்டுப் பிரியலை. அது செஞ்சோற்றுக் கடன். அது மாதிரி நீ பிருந்தாவுக்கு செய்யறது துரோகம்னாலும், அந்த பழி பாவத்தை சுமந்துகிட்டு அகிலாவைக் கட்டுறது தான் சரினு பேசறாங்க... என்னால முடியாதுடா. பிருந்தா என் மேல எத்தனை நம்பிக்கை வச்சிருக்கா தெரியுமா. நான் செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்க அவ வாழ்வை ஏன் பலி கொடுக்கணும்?"



குமார் பொது இடம் என்றும் பாராமல் குலுங்கிக் குலுங்கி அழுதான்.

ராஜசேகர் ஓய்வாய் தோட்டத்தில் அமர்ந்து கொண்டிருந்தான். கல்லூரி முடிந்து பொட்டி படுக்கையோடு ஊர் திரும்பியாகிவிட்டது. கையில் கதைப் புத்தகம் விரிந்திருந்தாலும், மனம் அதில் பதியாமல் குமாரின் பிரச்சினை பற்றியே உழன்றது. இந்த ஐந்தாறு வருடங்களில் பிருந்தாவும் அவனுக்கு இனிய தோழியாகி இருந்தாள் நல்ல பெண்!

கிராமத்தில் கல்யாணம் நிச்சயமாகித் தடைப்பட்டால் அதன் பின் அந்தப் பெண்ணின் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடும். அப்படிப் பார்த்தால் அகிலா பாவம்.

காதலனை நம்பி பிள்ளை சுமக்கும் பிருந்தாவும் பாவம்!

குமார் என்னதான் செய்வான் பாவம்! ஒரு நொடி தான் அகிலாவை மணக்க முன் வந்தால், குமாரின் பிரச்சினை தீரும் என்று கூட நினைத்தான் அந்த உண்மையான நண்பன். ஆனால், கிராமத்து ஜாதி அந்தஸ்து பேதங்களை மீறி அதெல்லாம் சாத்தியமில்லை என்பதும் அவனுக்குப் புரிந்தே இருந்தது. பாவம் குமார்!

யோசிப்பின் தீவிரத்தில் தன்னை மறந்திருந்தவன் தன் எதிரே அன்னம்மா வந்து நிற்பதை கவனிக்கவில்லை.

"என்ன தம்பி யோசனை?"

தூக்கிப்போட நிமிர்ந்தான். அன்னத்தைப் பார்த்தவன் வாரிச்சுருட்டி எழுந்து, "வாங்கம்மா," என்றான்.

எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தவள், "உன்கிட்ட ஒரு உதவி கேட்டு வந்திருக்கேன்ப்பா."

"என்னம்மா?"

"நான் அந்த பிருந்தாவைப் பார்க்கணுமே."

## 11

பிருந்தா ரொம்ப நேரம் எதுவும் பேசவில்லை. அந்த மௌனத்தைக் கலைத்த அன்னம் கடைசியாக, "ஒரு பெண்ணோட எதிர்காலம், அவ அம்மாவோட உயிர், அவ அப்பாவோட மானம் எல்லாமே உன் கையில இருக்கும்மா. குமாரு உனக்கு துரோகம் செய்ய மாட்டேங்கறான். உத்தமமான குணம்! அவனைப் பெத்ததுக்கு நான் கொடுத்து வச்சிருக்கணும். அவனைக் கட்டிக்கப் போறேங்கற நம்பிக்கையில தான் நீயும் உன்னை அவன்கிட்ட இழந்திருக்க. ஆனா, நம்ம மீறி சூழல் நமக்கு எதிரா இருக்கு. முடிவை உன் கையிலயே விட்டுடறேன்."

எழுந்து கைகூப்பி விருட்டென்று விலக்கினாள்.

குமார் கதறினான்.

"பிருந்தா, நிச்சயம் நான் இதுக்கு சம்மதிக்கமாட்டேன். அதுவும், உன் வயித்துல என் குழந்தை இருக்கும்போது உனக்கு துரோகம் செஞ்சுட்டு நான் வேற ஒரு பொண்ணு கழுத்துல தாலி கட்டினா எனக்கு நரகம்தான்."

"நானாத்தானே விலகறேன், குமார். கணவனுக்கு ஒரு இழுக்குன்னா மனைவிதானே உரிய நடவடிக்கை எடுக்கணும். நீங்க அந்தக் குடும்பத்துக்கு செய்யவேண்டிய உதவி, நன்றி இதிலிருந்து வழுவாம இருக்க, நான்தானே துணை நிக்கணும்."

"நல்லாப் பேசற, பிருந்தா. ஆனா..."

"நல்லா யோசிங்க, குமார். நாம பிரியறதனால நம்ம ரெண்டு பேருக்கத்தான் வலியும், நஷ்டமும். ஆனா, நீங்க அகிலாவை மணக்காட்டி, உங்க மாமா குடும்பமும் அம்மாவும் அழிஞ்சு போயிடுவாங்க. அவங்க அழிவுல நாம வாழ்க்கை ஆரம்பிச்சா உருப்படுவோமா? அதுக்கு மனப்பூர்வமா விலகிடறது நல்லது. என் மனசு எப்பவும் உங்களை வாழ்த்திக்கிட்டுத்தான் இருக்கும் குமார். உங்க வாரிசோட நான் வாழ்ந்துடுவேன்."

"என் வாரிசுக்கு ஊர் அறிய இன்ஷியல் வேண்டாம்?"

ராஜசேகர் இடை புகுந்தான்.

"இன்ஷியல் நான் தரேன்டா."

குமார் அரண்டான். "ர... ராஜா... என்ன சொல்ற?"

"உன் பிள்ளையும் உன் பிருந்தாவும் இனி ஊர் உலகைப் பொறுத்தவரை என் பிள்ளை -என் மனைவி. அதாவது, ஊர் உலகத்துக்கு மட்டும்தான்."

பிருந்தாவும் குமாரும் ஒரு சேர அதிர்ந்தார்கள்.

"ராஜா..."

"இந்த முடிவுதான் நம்ம எல்லோருக்கும் முக்கியமா பிறக்கப்போற குழந்தைக்கும் நல்லது குமார்."

"எப்படிடா? உனக்குனு வாழ்க்கையே இல்லாம..."

"நட்புக்காக இதுகூட செய்ய மாட்டேனாடா?"

குமார் கதறியபடி ராஜாவை இழுத்து அணைத்துக் கொண்டான். பிருந்தா முகம் மூடி அழுதாள். பின் மெல்லத் தெளிந்து, "குமார், என் நினைவா அகிலா வாழ்வைப் பாழாக்க மாட்டேன்னு ப்ராமிஸ் பண்ணுங்க."

அவன் கையடித்துச் சத்தியம் செய்தான். அதில் அவன் கண்ணீர்த் துளிகள் விழுந்தன.

அகிலாவும் குமார் திருமணம் நடந்தது. அவள் பிள்ளை பேறு என்று அம்மா வீட்டில் இருக்கும் சமயம் அவன் எம்.எஸ்.முடித்தது. ராஜசேகரும் பிருந்தாவும் டவுனில் செட்டிலாகி எம்.எஸ்.முடித்தது என்று வாழ்க்கை ஓடியது.

பிருந்தாவிற்கு ரமேஷ் பிறந்த சில மாதங்கள் கழித்து அகிலாவிற்கு மதுமிதா பிறந்தாள். பிருந்தாவின் வாக்கு கொடுத்தபடி அகிலாவிற்கு நல்ல புருஷனாகவே வாழ்ந்தான் குமார்.



இடையில், பிருந்தாவிற்கு லெக்சரர் பதவி கிடைக்க, குமாரும் ராஜசேகரும் 'ராஜ்-குமார்' மருத்துவமனையைத் துவங்கினார்கள். அகிலாவும் குமாரும் டவுனுக்கு மாறினார்கள்.

எத்தனை கூப்பிட்டும் அவள் அம்மா மாமா அத்தை மூவரும் கிராமத்தை விட்டு வர மறுத்துவிட்டார்கள்.

குழந்தைகள் வளரவளர பழசையெல்லாம் மனதின் ஆழத்தில் புதைத்துவிட்டு பிருந்தா, குமார், ராஜசேகர் மூவரும் பழைய நட்பை மட்டுமே உறுதியாய்ப் பிடித்துக் கொண்டு கயிறு மேல் நடக்கும் வித்தைபோல் ஜாக்கிரதையாய்ப் பயணிக்க, எங்கோ ஒரு சந்தேகப் பொறி அகிலாவை மெல்ல மெல்ல கொன்றிருக்கிறது.

அது வெடித்துச் சிதறி... இப்போது பழைய உண்மைகள் வெளியே வந்து...

அகிலா, இப்பவும் சொல்றேன். இந்த இருபது வருஷமா உனக்கு மட்டும் தான் கணவனா நான் வாழறேன். குமாரின் குரலில் உண்மை ஒலித்தது. அவள் முகம் கனிய மற்றவர்கள் காத்திருக்க, அவளோ கோபமாய் குமாரை முறைத்தபடி. "அப்ப, இந்த உண்மைகளை மறைச்சு என்னைக் கட்டிக்கிட்டிருக்கீங்க. செஞ்சோத்துக் கடனைத் தீர்க்க, யாரோ ஒருத்தியோட காதலன் எனக்கு கணவனா மாறிட்டீங்க. பேஷ்! என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருந்தா, பிருந்தாவுக்கு பதில் நான் உங்க வாழ்விலிருந்து விலகியிருப்பேனே... இப்ப எனக்குத் தெரியாம இத்தனை பெரிய பிள்ளை-உங்க மகன்!"

அவர்கள் அனைவரும் ஸ்தம்பித்தார்கள். விருட்டென்று உள்ளே போன அகிலா போன வேகத்தில் கைப்பையோடு வெளியே வந்தாள்.

"டிரைவர், திட்டைக்குக் காரை எடு," என்றவள் "அம்மா, அம்மா" என்று ஓடிவரும் மகளைக் கூடப் பொருட்படுத்தாமல் காரில் ஏறிப்போனாள். மதுமிதா தோல்வியோடு வந்து பொத்தென்று சோபாவில் விழுந்தாள். தலைகுனிந்து பிருந்தா அழுது கொண்டிருந்தாள்.

"சாரி, பிருந்தா. அகிலாவுக்காக குழந்தைகள் எதிரே உன்னை விட்டுக் கொடுத்துட்டேன்."

அதுவரை ஷாக்காகி உட்கார்ந்திருந்த ரமேஷ் விறுக்கென்று நிமிர்ந்தான்.

"என்ன அங்கிள் சொன்னீங்க? நீங்க சொன்னதனால எங்கம்மா மேல மதிப்பு கூடியிருக்கே தவிர குறையலை. திருமணத்துக்கு முன்னாடி கர்ணனைப் பெத்த குந்தியையும், அரசனை மணந்தும் கிருஷ்ணருக்காக வாழ்ந்த மீராவையும் பார்த்த பூமி இது. எங்கம்மா கண்டவங்களோட சேர்ந்து கெட்டலையலை. உயர்வான வாழ்வு வாழற இவங்களுக்கு மகனாப் பிறந்ததுக்கு நான் ரொம்ப சந்தோஷப்படறேன்."

அப்படியே மகனின் மடியில் சரிந்து குலுங்கினாள் பிருந்தா.

மெல்ல ராஜசேகர் குமாரின் தோள் அணைத்து, "குமார், இதுவரை உன் பொக்கிஷங்களை பத்திரமாய் பாதுகாத்துட்டேன். இனி உன்கிட்ட

ஒப்படைக்கும் நேரம் வந்தாச்சுனு நினைக்கறேன். அகிலா உண்மை உணர்ந்து திரும்பிடலாம். அதேசமயம், எல்லோருக்கும் விஷயம் தெரிஞ்சதனால, இனி உலகுக்காக பயப்படாம, உன் மகனையும் பிருந்தாவையும் ஏத்துக்க."

"என் கண்ணைப் பார்த்துச் சொல்லு, ராஜா."

இந்த வாக்கியம் அவர்கள் கல்லூரி நாட்கள் முதல் மூவரும் சொல்வது. இப்படிக் கேட்டால் எப்படி உண்மையைச் சொல்லாமல் இருக்கமுடியும்?

"ராஜா, பிருந்தா ஜடப்பொருளா இருந்தா, 'கொடு என் பொக்கிஷத்தை'ன நான் திரும்ப வாங்கிக்கலாம். அவ உயிருள்ள மனுஷிடா. வேண்டாம்னு நான் தூக்கிப் போட்டுட்டு வேண்டும் போது மட்டும் எடுத்துக்க விளையாட்டு பொம்மை இல்லை. அவ ஒரு மகனுக்குத் தாய்.

நாங்க உயிருக்குயிரா நேசிச்சோம். விதி பிரிஞ்சுட்டோம். இந்த இருபது வருஷமா என் மனகல மனைவினு அகிலாதான் இருக்கா. அதேமாதிரி, எனக்குத் தெரியும். பிருந்தா மனகல கணவனா... நீ நிறைஞ்சிருக்கே பொக்கிஷத்தைத் தூக்கிப் போட்டவனைவிட, அதைப் பாதுகாத்தவனுக்கு உரிமை அதிகம்."

"குமார், இருவரும் கூவினார்கள். ராஜசேகர் அதிர்ந்தும் பிருந்தா திகைத்தும் அழைத்தார்கள். கைகாட்டி தடுத்தவர் தானே தொடர்ந்தார்" எதுவும் பேசாதீங்க. நான் தெரிஞ்சோ தெரியாமலோ ரெண்டு பெண்கள் வாழ்க்கையில விளையாடிட்டேன். இப்பவும் நிறைவா மனைவி மகன்னு வாழறேன். நட்புக்காக நான் என்னடா செஞ்சேன்? நீ உன் வாழ்வையே எங்களுக்காக தொலைச்சவன்டா. பேருக்கு-ஊருக்காக -மனைவினும், இரவல் மகன்னும் வாழற. நீ இப்படி உன்னைத் தியாகத்துல கரைச்சுக்கறதைக் கண் எதிரே தினம் பார்த்துப் பார்த்து உருகிப் போறா பிருந்தா. அதான் போனவாரம் பி.பி.எகிறி படுத்துட்டா. என் மகனுக்கு இனிஷியல் நீ தராட்டி இப்ப இவ்வளவு கௌரவமா ஒரு வாழ்க்கை வாழமுடிஞ்சிருக்குமா இவங்களால, இல்ல, என்னால தான் நிம்மதியா வாழ்ந்திருக்கமுடியுமா?"

ராஜசேகர் நெளிந்தார். "குமார், எக்சாஜரேட் பண்றடா."

"உண்மையைப் பேசறேன்டா. நானும் பிருந்தாவும் உனக்குக் கடன் பட்டிருக்கோம். சாகற வரை எங்களைக் கடனாளியா வச்சுடாதே. நல்ல நாள் பார்த்து-வீட்ல வச்சு-எங்க முன்னாடி அவ கழுத்துல தாலியக் கட்டு. உண்மையான கணவன் மனைவியா வாழுங்க."

"கு... குமார்."

"என்னடா தயக்கம்? போனவாரம் அவ படுத்திருந்தப்ப அப்படி துடிச்சுப் போனியே அதெல்லாம் நடிப்பா?"

ராஜசேகரால் பதில் சொல்லமுடியவில்லை.

"அங்கிள், நான் நாள் பார்க்கறேன். அங்கிள். அப்பா தாலி கட்டுவார்." என்றான் ரமேஷ்.





'கிழக்குக் கடற்கரை சாலை' பாடல் வெளியீட்டில், தயாரிப்பாளர் அந்தணன் - சிம்பு, இயக்குநர் எஸ்.எஸ்.ஸ்டான்லி.

"ரமேஷ், இவர் உன் அப்பாடா. இன்னும் அங்கிள்னு கூப்பிடறியே." வெகுளியாய் மது சமயம் தெரியாமல் சொல்லிச் சிரித்தாள்.

"சாரி, மது. இந்த இப்பிறவிக்கு ராஜசேகர் தான் என் அப்பா. அங்கிள், சாரி, நீங்க புரிஞ்சுப்பீங்கன்னு நினைக்கறேன்."

குமார் அவனை தன் தோள் மீது சாய்த்து தலைதடவினார். பனித்த கண்களை அவனறியாமல் துடைத்தபடி, "யூவார் ரைட் மை சன்." என்றவர் "இந்த சன்-நண்பனின் மகனைத் தன் மகனாச் சொல்ற ஒரு பார்மாலிட்டி. மதுவை எப்படி உங்க வீட்ல மகளாக் கொண்டாடறாங்களோ அப்படித்தான் நீ இந்த வீட்டுக்கு மகன். நத்திங் மோர் தேன் தட்." என்றார்.

"வர்ர வெள்ளிக்கிழமை நாள் நல்லா இருக்கு." என்றாள் மதுமிதா நாட்காட்டியைப் புரட்டியபடி.

"அதுக்குள்ள அம்மா வந்துடுவாங்களாப்பா?" சின்ன ஏக்கத்தோடு கேட்கும் மகளைத் தலைதட்டிச் சிரித்த குமார், "நிச்சயமா! அவளுக்கு உண்மைகளை ஜீரணிக்க கொஞ்சம் டயம் வேணும் அவ்வளவுதான். ரொம்ப நாள் நம்மைப் பிரிஞ்சு அவளால இருக்கமுடியாது. அப்படியே இருந்தாலும்,

ரெண்டு பாட்டிகளும் சேர்த்து இங்க துரத்திட மாட்டாங்க."

எல்லோரும் சிரித்தார்கள்.

"ராஜா அங்கிள், நீங்க இன்னும் உங்க சம்மதத்தைச் சொல்லலையே" மது ராஜசேகரை சீண்ட-

"அம்மாவும் தான் சம்மதம்னு சொல்லலை." ரமேஷ் பிருந்தாவை கேலி செய்தான்.

"இந்த இப்பிறவிக்கு ராஜசேகர்தான் என் அப்பானு நீ சொன்னபிறகும் ரெண்டு பேரும் மறுப்பாங்களா என்ன? என்ன, பசங்க எதிரே ஒப்புக்க கொஞ்சம் கூச்சப்படறாங்க."

"அப்ப, வாங்க நாம உள்ள போகலாம். அகிலா ஆன்ட்டி இருந்தா நல்லா வக்கனையா சாப்பாடு கிடைக்கும். என் இனிய தங்காய்... உனக்கு ஏதாவது தெரியுமா?"

"அதுக்கு முன்னாடி... என் இனிய அண்ணாத்தே... இந்தக் கதையிலி ருந்து கிடைக்கும் நீதி என்ன?"

"காதலிச்சா வீட்ல விஷயத்தைப் போட்டு டபக்குனு ஒட்சிடணும்..."

"ம், அஞ்சாறு வருஷம் காலம் தாழ்த்தக்கூடாது. அதனால, நீ பப்பியை டாவடிக்கற விஷயத்தை இப்ப எடுத்துவுடு."

"அடிப்பாவி, கடைசியில என்னையே கவுத்துட்டியே." அவன் பாவனையாய் கை ஓங்கித் துரத்தப் புள்ளி மானாய்த் துள்ளி ஓடினாள் மதுமிதா.

குமார் இருவருக்கும் சமாதானம் ஏற்படுத்தும் சாக்கில், அவர்களைத் தொடர்ந்து தோட்டத்துப் பக்கம் போனார்.

தனிமையில் ராஜசேகரும பிருந்தாவும் முன்பு பலமுறை இருந்திருக்கிறார்கள். ஆனால் முதல் முதலில் கணவன் முன் நிற்கும் புதுமணப் பெண் போல் இன்று தலைகுனிந்து நின்றாள், பிருந்தா. இன்றைய சூழலே வேறல்லவா!

மெல்ல அவள் அருகே சென்ற ராஜசேகர், "பிருந்தா, உனக்கு இதுல மனப்பூர்வமா சம்மதம்தானே?" என்று முதல் முறையாய் அவள் முகவாயைத் தொட்டு முகம் தூக்கினார்.

அவள் கண்கள் நிறைந்து வழிந்தன. அப்படியே அவர் கால்களில் சரிந்து கதறினாள். அதற்கு மேல் பொறுக்க முடியாதவராய் அவளைத் தூக்கி தன் தோளில் சாய்த்துக் கொண்டார் ராஜசேகர்.

தோட்டத்துப் பக்கத்திலிருந்து கணீரென்ற குரலில் ரமேஷ் பாடுவது கேட்டது.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி.

இருந்ததும் இந்நாடே..."

நெகிழ்ந்து அழுத நிலையிலும் பிருந்தாவின் முகம் நாணத்தால் சிவந்தது. வெட்கச் சிரிப்போடு ராஜசேகர் நெஞ்சில் அப்படியே புதைந்தாள்.

**(முற்றும்)**